# கலை கல்வி

வகுப்பு - மூன்று



Tele MANAS
National Tele Mental Health Programme
14416

# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி-மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 9800 - 89 - 14416)**

**தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.**

# மனோதர்பன்

**வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.**

அரசு தீர்மானம் எண்: அப்யாஸ் 2116/ப்ர எண் 43/1 எஸ் டி நாள் 25-04-2016ன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 13.04.2026-ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாட நூலை 2026 - 27 கல்வி ஆண்டிலிருந்து பயன்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.



# கலைக் கல்வி

## வகுப்பு – மூன்று



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் விரைவுக் குறியீட்டை (Q.R. Code) ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதனால் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி – ஒளி வடிவிலான கற்றல், கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு 2026

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411004

இந்தப் பாடநூலின் அனைத்து உரிமைகளும் மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகத்திற்கு உரியது. இந்த பாடநூலின் எந்தவொரு பகுதியையும் மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறுபிரசுரம் செய்யவோ அல்லது பயன்படுத்தவோ கூடாது.


**கலைக்கல்வி பாடக்குழு**

திரு. ஷஷிகாந்த் தேஷ்முக் (தலைவர்)
திரு. சிவாஜி ஹாண்டே (உறுப்பினர்)
திரு. கோரக்ஷநாத் ஆபுஜ் (உறுப்பினர்)
திரு. ஸ்ரீகாந்த டால்கர் (உறுப்பினர்)
திருமதி. புனம் போபலே (உறுப்பினர்)
திருமதி. சாயா மால்வல் (உறுப்பினர்)
திருமதி. சினேஹா காடே (உறுப்பினர்)
டாக்டர் கமேதா தாக்கூர் (அழைப்பாளர்)
திரு. நந்தகிஷோர் நகர்கர் (அழைப்பாளர்)
திருமதி. முருகயா மோரே (அழைப்பாளர்)
திரு. அமோல் ஜாதவ் (அழைப்பாளர்)
திரு. நித்தின் மஹாமுனி (அழைப்பாளர்)
திருமதி. வ்ருசாலி லேலே (அழைப்பாளர்)
திரு. நிந்தாலி ஹர்குடே (அழைப்பாளர்)
திரு. ஓம்கார் வைராக்கர் (அழைப்பாளர்)
திரு. அமோல் போதே (அழைப்பாளர்)
திருமதி. ஜுய் தேசிங்க்கர் (அழைப்பாளர்)
திருமதி. ரஷ்மி ஜோஷி (அழைப்பாளர்)
டாக்டர் கீதாஞ்சலி போரூடே (கலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்)
டாக்டர். அஜய்குமார் லோழகே (செயலாளர் - உறுப்பினர்)

**ஒருங்கிணைப்பு**

டாக்டர் - அஜய்குமார் லோல்கே
சிறப்பு அதிகாரி, பணி அனுபவக்கல்வி (C.B.)
I/C. சிறப்பு அதிகாரி, கலைக்கல்வி (C.B.)
பணி அனுபவக்கல்வி, பாடநூல் கழகம், புனே.

**அட்டைப்படம் மற்றும் உள் படங்கள் :**

திரு. லஷ்மிகாந்த் காலே, திருமதி. ப்ரஜக்தா கோர்கர்
திரு. மனோகர் பாவிஸ்கர், திருமதி. ப்ராச்சி போத்தார்
திரு. சோஹம் ஒதாரி, திரு. அஜய் பராட்கர்



அச்சுக்கோர்ப்பு : அஞ்சாமை கலை & அச்சு
அறச்செல்வன் அஸ்மல்லா

காகிதம் : 70 ஜி.எஸ்.எம் க்ரீம்வோவ்

அச்சாணை :

அச்சிட்டோர் :



**மதிப்பாய்வாளர்கள்**

திரு. பிரமோத் காம்ப்ளே (தர ஆய்வாளர்)
அட்வ. சந்தேஷ் சாக்கரே (சட்ட நிபுணர்)
பேராசிரியர். விலாஸ் பண்டிட் (CWSN நிபுணர்)

**தயாரிப்பு**

திருமதி. மித்தாலி ஷித்தப்
I/C முதன்மை தயாரிப்பு அதிகாரி

திரு. சந்தீப் அஜ்காவ்கர்
தயாரிப்பு அதிகாரி

**மொழிபெயர்ப்பு**
திருமதி. மரியவசந்தா சேவியர்

**ஆய்வு**
திருமதி. சித்ரா பாலசுப்ரமணியன்

**மொழி பெயர்ப்பு ஒருங்கிணைப்பு)**
டாக்டர். துலசி பாரத் பூஷண்
சிறப்பு அதிகாரி- தெலுகு (C.B.)
பாடநூல் தயாரிப்பு கழகம், புனே



**வெளியீட்டாளர்**

திரு. ஹேமந்த் பாபர்

I/C கட்டுபாட்டாளர்
பாடநூல் தயாரிப்பு கழகம், பிரபாதேவி, மும்பை-25.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும்

தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

### இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பகுதி 4 **A**

## குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முகவுரை

குழந்தை நண்பர்களே,

தேசிய கல்விக் கொள்கை 2020-இன் படி, 'கலைக்கல்வி' என்ற பாடத்திற்கான இந்த மூன்றாம் வகுப்பு பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. உங்களின் வயது மற்றும் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தப் பாடநூலைப் படிப்பதில் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள்.

விளையாட, பாடல்கள் பாட, படங்கள் வரைய மற்றும் வண்ணம் தீட்ட, நடிக்க, நடனமாட மற்றும் களிமண்ணால் பொருட்களைச் செய்ய உங்களுக்குப் பிடிக்கும் அல்லவா? இந்த விஷயங்கள் அனைத்தையும் நீங்கள் இந்தப் பாடநூலின் மூலம் செய்யப் போகிறீர்கள். காட்சிக்கலை , அரங்கம், இசை மற்றும் நடனம் போன்ற அனைத்துக் கலை வடிவங்களின் செயல்பாடுகளிலும் நீங்கள் மிகவும் மகிழ்வீர்கள். அதே போல், இந்தக் கலை வடிவங்களின் சிறிய விளக்கக்காட்சியையும் உங்களால் செய்ய முடியும். நீங்கள் தயாரித்த சில பொருட்களை மற்றவர்களுக்குப் பரிசாகவும் வழங்கலாம். அதனால் உங்களுக்கு மகிழ்ச்சியும் பாராட்டுகளும் நிச்சயம் கிடைக்கும். இந்தச் செயல்பாடுகளின் மூலம் வளமான இந்தியப் பாரம்பரியத்தின் சிறிய அறிமுகத்தை கலை கலாச்சாரத்தோடு நாம் பெறலாம். எனவே, வாருங்கள், செயல்பாடுகள் நிறைந்த கற்றல் அனுபவத்தைப் பெறுவோம்!

செயல்பாடுகள், படங்கள், உரையாடல்கள், கதைகள், பாடல்கள் மற்றும் விளையாட்டுகள் ஆகியவற்றின் மூலம் கற்றல் மிகவும் எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் மாறும். ஒவ்வொரு செயல்பாட்டையும் நீங்களாகவே செய்து கற்பதற்கான வாய்ப்பு இந்தப் பாடநூலில் உங்களுக்குக் கிடைக்கும். ஆசிரியர்கள் உங்கள் செயல்பாடுகளைக் கவனிப்பார்கள், நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்பதைப் பார்த்து அதைப் பதிவு செய்வார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பாணியில் கற்க வேண்டும், முயற்சி செய்ய வேண்டும் மற்றும் ஒவ்வொரு செயல்பாட்டிலும் பங்கேற்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

இப்பாடநூலில் உங்களுக்குப் பிடித்த விஷயங்கள் மற்றும் சேர்க்கப்பட வேண்டிய பிற விஷயங்கள் குறித்த உங்கள் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவிக்க மறக்காதீர்கள். நீங்கள் சமர்ப்பித்த கலைப்படைப்புகளின் ஆடியோ-விஷுவல் பொருட்களையும் கழகத்திற்கு அனுப்பலாம். சரி, வாருங்கள், கற்போம், செய்வோம், மகிழ்வோம்!

உங்களின் பிரகாசமான எதிர்காலத்திற்கு மனமார்ந்த வாழ்த்துகள்!

**(அனுராதா ஓக்)**

இயக்குநர்,

மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே - 4.

புனே

நாள்: 19 ஏப்ரல் 2026

இந்திய சூரிய ஆண்டு: வைஷாக் சு. 2, சகாப்தம் 1948

# ஆசிரியர்களுக்காக

தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் வழிகாட்டுதலின்படி மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு கலைக்கல்வி பாடம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. கலைக்கல்விப் பாடத்திட்டத்தின் நோக்கம் மாணவர்களிள் படைப்பாற்றலுக்கு வாய்ப்பளிப்பது, அவர்களின் கற்பனையை மேம்படுத்துவது, சுய வெளிப்பாட்டை ஊக்குவிப்பது மற்றும் கற்றல் செயல்முறையை மகிழ்ச்சிகரமாக மாற்றுவது ஆகும்.

இப்பாடப் நூலில் நான்கு கலை வடிவங்கள் உள்ளன. காட்சிக்கலை, நாடகம், இசை, நடனம் அல்லது அசைவு ஆகும். ஒவ்வொரு கலை வடிவத்தின் மூலம் மாணவர்கள் தங்கள் யோசனைகளைக் கவனித்து, நிகழ்த்தி, உருவாக்கி, கற்பனையை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

கற்றல் அனுபவமானது செயல்பாடு சார்ந்த பணிகள், செயல்முறைப் பணிகள், கலந்துரையாடல்கள் மற்றும் பாத்திரமேற்று நடித்தல் போன்ற கலை கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு செயல்பாடும் ஒரு மகிழ்ச்சியான கற்றல் செயல்முறைக்கு முக்கியத்துவம் அளிக்க வெணடும். காட்சிக்கலைகள், நாடகம், இசை, நடனம் மற்றும் இயக்கத்தின் மூலம் மாணவர்கள் தங்கள் எண்ணங்கள், விளைவுகள் மற்றும் கருத்துகளை எளிதாக வெளிப்படுத்த முடியும். இப்பாடநூல் கூடுதல் தகவல்களை வழங்கினாலும் கேள்விகள் மற்றும் சுய கற்றல் செயல்முறை விளக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பாடநூல் காட்சிக்கலை, நாடகம், இசை, நடனம் மற்றும் அசைவு என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தாலும் ஆண்டு திட்டமிடலில் நான்கு பிரிவுகளின் கூறுகளுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் ஆண்டு முழுவதும் நான்கு கலை வடிவங்களையும் ரசித்து அனுபவிக்க முடியும். கொடுக்கப்பட்ட QR குறியீட்டைப் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும் ஒவ்வொரு பிரிவிற்கும் சில வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**காட்சிக்கலை:**

- பல்வேறு வகையான கோடுகளையும் வடிவங்களையும் பயிற்சி செய்யுங்கள். அத்துடன் அழகான கையெழுத்துகளை உருவாக்க வெவ்வேறு எழுத்துக்கூறுகளைப் பயன்படுத்துங்கள்.
- இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட கூறுகளுக்குக்கிடையே உள்ள வேறுபாட்டை விளக்கி, எடுத்துக்காட்டுகளை வழங்குங்கள்.
- ஒரு நினைவு ஓவியம் வரையும் படிகளை விளக்கவும். மற்றவர்களின் படங்களை நகலெடுக்கவில்லை என்பதை உறுதிபடுத்துங்கள். மேலும் ஒரு காட்சியை விவரிப்பதன் மூலம் ஒரு நினைவு ஓவியம் வரைய மாணவர்களை ஊக்குவிக்கவும்.
- நினைவு மற்றும் கற்பனைப் படங்களுக்கு இடையிலான வேறுபாட்டைத் தெளிவுபடுத்தி, அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளை வழங்குங்கள். அவர்களின் கற்பனையைச் சுதந்திரமாக ஓட அனுமதிக்கும் கதைகளைச் சொல்லி சூழலை உருவாக்கவும்.
- பல்வேறு வகையான ஓவியங்கள், புகைப்படங்கள், சிற்பங்களைச் சேகரித்து கல்வி உபகரணங்களாக பயன் படுத்தப்பட வேண்டும்.
- அனைத்து மாணவர்களும் இயல்பாகவே காட்சிக்கலை வரைவதை விரும்புவதில்லை. எளிய செயல்முறை கற்றல் அனுபவங்கள் மூலம் ஆர்வத்தை வளர்ப்பது அவசியம். ஒரு மாணவர் காட்சிக்கலையில் புதியதாக எதையாவது உருவாக்க முயற்சித்தால் அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும் பொருத்தமான வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.
- மாணவர்களுக்கு உள்ளூர் கலை வடிவங்களையும் கலைஞர்களையும் அறிமுகப்படுத்துங்கள். முடிந்தால் உள்ளூர் கலைஞர்களின் ஸ்டுடியோக்களுக்கு ஒரு களப்பார்வை பயணத்தை ஏற்பாடு செய்யுங்கள்.

**நாடகமேடை:**

- வகுப்பறையில் ஓர் இனிமையான சூழலை உருவாக்கி எளிமையான, இயல்பான செயல்கள், அசைவுகள் மற்றும் மௌன மொழி செய்ய ஊக்குவிக்கவும். வகுப்பை சிறு குழுக்களாகப் பிரித்து ஒரு காட்சியை வழங்கும்படி அவர்களிடம் கேட்கவும்.
- பல்வேறு விலங்குகள், பறவைகள் மற்றும் இயற்கைகளின் கூறுகளைப் பாத்திரங்களாக கொடுத்து நடிக்கச் சொல்லுங்கள்.
- மாணவர்களுக்கு தங்களின் சொந்த உரையாடல்களையும். அசைவுகனையும் வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கவும். படங்களை காட்டி இந்தப் படத்தில் என்ன தெரிகிறது? என்பது போன்ற கேள்விகளைக் கேட்கவும்.
- அனைவருக்கு ஒரு கதாபாத்திரத்தை வழங்கி, நிகழ்ச்சியில் பங்குகொள்ள செய்யவும். அவர்களின் அன்றாட வாழ்வுடன் தொடர்புடைய காட்சிகளைத் தேர்ந்தெடுக்கவும். நிகழ்ச்சிகளின் போதும் - இயக்கங்களின்போதும் பாதுகாப்பு கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
- பொருள்களை பல்வேறு வழிகளில் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். மற்ற குழுக்களின் மாணவர்கள்

நிகழ்ச்சிகளை காண வாய்ப்பு வழங்கவும்.

- கவனித்தல் சார்ந்த கருத்துகளை வழங்குவதை ஊக்குவிக்க வேண்டும். வகுப்பறை நாடகக் கருத்துகள் செயல் - படுத்தப்பட வேண்டும்.

**இசை:**

- மாணவர்களின் தீவிர பங்கேற்பை ஊக்குவிக்க செயல்பாட்டின்போது ஒரு மகிழ்ச்சியான உற்சாகமான சூழலை உருவாக்கவும்.
- பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர் முதலில் பாடலைத் தானே கேட்டு, அதைப் பாடி பார்க்க வேண்டும். மேலும் பாடலை சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து கற்பிக்க வேண்டும்.
- தாளம், லயம் ஆகிய கருத்துகளை எளிய எடுத்துகாட்டுகள் மூலம் அறிமுகப்படுத்துங்கள். தாளத்திற்காக கைதட்டல்களைப் பயன்படுத்தி பாடலை ஈர்க்கக்கூடியதாக ஆக்குங்கள். தனி நபர் மற்றும் இரட்டையர் பாடலை ஊக்குவிக்கவும்,
- வாசுதேவ்கீத், பௌடா, பாரூட், பஜன் மற்றும் ஜாத்யா போன்ற நாட்டுப்புற இசையை அறிமுகப்படுத்தி, செயல்முறை விளக்கங்களுடன் பயிற்சி செய்யவும்.
- லயத்தைப் பற்றிய விழிப்புணர்வை வளர்க்க / கிடைக்கக்கூடிய இசைக் கருவிகளை (டோல், ஜோன்ஸ், தபேலா, ஹார்மோனியம், தால் போன்றவை) பயன்படுத்தவும். சிறிய குழுக்களாக பிரித்து, பாடல்களைப் பாடச் செய்யவும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் பாடுவதிலோ அல்லது ஒரு வாத்தியம் வாசிப்பதிலோ பங்குகேற்கும் வாய்ப்பை வழங்குவதன் மூலம் அவர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.
- கிடைக்கும் பொருள்கள் அல்லது வீடியோக்களைப் பயன்படுத்தி, தாள உருவில் ஸ்வரம் மற்றும் அலங்காரப் பயிற்சி செய்யவும்.
- **பாடல்களைக் கற்றுக் கொள்வதற்கு முதல் பக்கத்தில் உள்ள QR குறியீட்டைப் பயன்படுத்தவும். குழு மற்றும் தனிநபர் விளக்கக் காட்சிகள் மூலம் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும்.**

**நடனம் மற்றும் அசைவுகள்.**

- வகுப்பறையில் ஒரு மகிழ்ச்சியான மற்றும் உற்சாகமான சூழலை உருவாக்கி, ஒவ்வொரு மாணவரையும் நடனத்தில் பங்கேற்க ஊக்குவிக்கவும்.
- எளிய இயற்கையான அசைவுகள் மூலம் நடனத்தை அறிமுகப்படுத்துங்கள்.
- தினசரி அசைவுகளை (எ.கா. நடப்பது, தாண்டுவது, திரும்புவது) நடனமாக மாற்ற ஊக்குவிக்கவும்.
- இசை, தாளம், வேகம் ஆகிய கருத்துகளை விளையாட்டு முறையில் அறிமுகப்படுத்துங்கள்.
- முக பாவனை மூலம் பல்வேறு உணர்ச்சிகளை (மகிழ்ச்சி, துக்கம், ஆச்சரியம்) வெளிப்படுத்த வழிகாட்டவும், சிறிய குழுக்களை எளிமையான நடன முயற்சிகளை வழங்க ஊக்குவிக்கவும். சொந்த பாணியில் தங்களை வெளிப்படுத்த ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- நடனமாடும்போது உடல் பாதுகாப்பு, பொருத்தமான ஆடை அணிதல் ஆகியவற்றிற்கு வழிகாட்டுதல் வழங்கவும்.
- கிடைக்கும் வளங்களை (இசை கருவிகள்) பொருத்தமாகப் பயன்படுத்தி, பல்வேறு வகையான நடன அனுபவங்களை வழங்க முயற்சி செய்யுங்கள்.
- நடனத்தின் முடிவில் அவர்கள் அனுபவித்தவை மற்றும் கற்றுக் கொண்டவை குறித்து ஒரு சிறிய கலந்துரையாடலை நடத்துங்கள். படைப்பாற்றலையும் சுயமரியாதையையும் ஊக்குவிக்கும் நேர்மறையான எண்ணத்தை வழங்குங்கள்.

இப்பாடநூல் அனைத்து வகையான மாணவர்களுக்கும் உள்ளடக்கிய அணுகுமுறையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள செயல்பாடுகள் ஒவ்வொரு மாணவரும் தங்கள் திறமைக்கேற்ப பங்கேற்கவும் அவர்களின் கலைத் திறமைகளை ஊக்குவிக்கவும் உணர்திறனுடன் வடிவமைக்கப்படுள்ளது.

ஒவ்வொரு கலைப்பிரிவிற்கும் குறிப்பிடபட்டுள்ள பாடத்திட்ட இலக்குகள், திறன்கள் மற்றும் கற்றல் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் மிகவும் பயனுள்ள கற்பித்தலை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கலைகளை முழுமையாக அணுகவும் மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழத் தேவையான திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும், இந்த இலக்கை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

**கலைக்கல்வி பாடக்குழு**

பாடநூல் கழகம், புனே.

| வகுப்பு : 3 - கலைக்கல்வி | |
|---|---|
| **காட்சிக்கலை** | |
| **பாடத்திட்ட நோக்கம் : CG – 1: கலையின் மூலம் மனித உணர்வுகளை ஆராய்தல், வரைதல் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றில் தன்னம்பிக்கையை வளர்த்தல்.** | |
| **திறன் : C – 1.1: அன்றாட வாழ்க்கையில் உள்ள உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் கற்பனைகளைச் சித்திரமாக வரைந்து வெளிப்படுத்துதல்.** | |
| **வரிசை எண்** | **கற்றல் விளைவுகள்** |
| 03AE01 | சுற்றியுள்ள பல்வேறு கூறுகளை எளிய முறையில் வரைதல். |
| 03AE02 | சுற்றியுள்ள பல்வேறு கூறுகளை நினைவிலிருந்து வரைதல். |
| 03AE03 | தனது சொந்தக் கற்பனைகளை சித்திரமாக வரைதல். |
| 03AE04 | சுற்றியுள்ள பல்வேறு கூறுகளை வெவ்வேறு வடிவங்களில் வரைதல். |
| **திறன் : C – 1.2: அன்றாடக் கலையில் பரஸ்பரத் தொடர்பைப் பேணி, பல்வேறு கற்பனைகள் மற்றும் எண்ணங்களைப் பற்றி விவாதித்தல்.** | |
| 03AE05 | எழுத்துக்களின் வடிவங்களை அடையாளம் கண்டு வரைந்து எழுதுதல். |
| 03AE06 | பல்வேறு எழுத்து வடிவங்களை அழகான முறையில் வரைந்து, அவற்றை எழுதுவதில் பயன்படுத்துதல். |
| **பாடத்திட்ட நோக்கம் : CG – 2: கலையின் மூலம் தனது கற்பனைத் திறன் மற்றும் படைப்பாற்றலைத் சுதந்திரமாகப் பயன்படுத்துதல்.** | |
| **திறன் : C – 2.1: அன்றாடக் கவனிப்பு, தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் உணர்வுகளைக் காட்சிப் படுத்துவதற்கு கலையின் கூறுகளை (கோடு, வடிவம், நிறம், பின்னணி, அமைப்பு) பல்வேறு சேர்க்கைகளில் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துதல்.** | |
| 03AE07 | கோடு என்ற கருத்தைப் புரிந்துகொண்டு, சுதந்திரமாகக் கோடுகளை வரைதல். |
| 03AE08 | பல்வேறு பரிச்சயமான வடிவங்களை வரைதல். |
| 03AE09 | சுற்றியுள்ள இயற்கை கூறுகளைச் சித்திரமாக வரைதல். |
| 03AE10 | அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களை எளிய முறையில் வரைதல். |
| **திறன் : C – 2.2: வகுப்பில் உள்ள மற்றவர்களின் கலைப் படைப்புகள், யோசனைகள் மற்றும் வெளிப்பாடுகளை ஒப்பிட்டு, அவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துதல்.** | |
| 03AE011 | அளவுகளுக்கு ஏற்ப ஒப்பிட்டுப் பார்த்து வரைதல். |
| 03AE12 | வடிவங்கள் மற்றும் வண்ணங்களின் சேர்க்கைகளை ரசித்தல். |
| 03AE13 | அடர் மற்றும் வெளிர் வண்ணங்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்து, அவற்றை ஓவியங்களில் பயன்படுத்துதல். |
| **பாடத்திட்ட நோக்கம் : CG – 3: கலையின் அடிப்படை செயல்முறைகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களில் தேர்ச்சி பெறுதல்.** | |
| **திறன் : C – 3.1: ஓவியம் வரையும்போது பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் ஊடகங்களை (Mediums) அறிந்துகொண்டு, பொருத்தமான நுட்பங்களைத் தேர்ந்தெடுத்தல்.** | |
| 03AE14 | பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தி வெவ்வேறு அமைப்புகளை உருவாக்குதல். |
| 03AE15 | கிடைக்கக்கூடிய பல்வேறு பொருட்களை ஓவியம் வரைவதற்குப் பயன்படுத்துதல். |
| 03AE16 | அச்சிடுவதற்கு  பல்வேறு பொருட்களைப் பயன்படுத்துதல். |
| 03AE17 | சுற்றியுள்ள ஊடகங்கள் மற்றும் பொருட்களைச் சேகரித்து, அவற்றிலிருந்து புதிய கலைப் படைப்புகளை உருவாக்குதல். |
| **திறன் : C – 3.2: தனிப்பட்ட மற்றும் குழுவாகக் கலைப் படைப்புகளை உருவாக்கும்போது திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் முன்வைத்தல் போன்ற படிகளைப் பின்பற்றுதல்.** | |
| 03AE18 | காகிதத்தின் சிறிய துண்டுகளைக் கொண்டு தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ ஒட்டோவியம் உருவாக்குதல். |
| 03AE19 | கிடைக்கக்கூடிய பொருட்கள் மற்றும் ஊடகங்களை ஒன்றிணைத்து முப்பரிமாண (3D) வடிவங்களை உருவாக்குதல். |
| 03AE20 | சேகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் சார்ந்த பொருட்களிலிருந்து முப்பரிமாண வடிவங்கள்/மாதிரிகளை உருவாக்குதல். |
| **பாடத்திட்ட நோக்கம் : CG – 4: சுற்றியுள்ள இயற்கையின் அழகைக் கண்டறிந்து, பல்வேறு உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார மரபுகள் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்துதல்.** | |
| **திறன் : C – 4.1: இயற்கையில் உள்ள காட்சிக் கூறுகளைக் கண்டறிந்து, அவற்றின் அழகியல் பண்புகளை விவரித்தல்.** | |
| 03AE21 | பல்வேறு கோடுகள் மற்றும் வடிவங்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொண்டு வரைதல். |
| 03AE22 | பல்வேறு கோடுகள் மற்றும் வடிவங்களை அடையாளம் கண்டு, அவற்றின் சிறப்பியல்புகளை விவரித்து வரைதல். |
| 03AE23 | இயற்கையில் உள்ள கூறுகளை எளிய முறையில் வரைதல். |
| **திறன் : C – 4.2: உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி அறிய ஆர்வம் காட்டுதல்.** | |
| 03AE24 | உள்ளூர் கலாச்சாரம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல். |
| 03AE25 | உள்ளூர் கலைஞர்கள்/கலை வடிவங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து சிறிய திட்டப்பணிகளை உருவாக்குதல். |

<table>
<tr><th colspan="2">நாடகம்</th></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட நோக்கம் : CG - 1: நாடகத்தின் மூலம் மனித உணர்வுகளை ஆராய்தல், நடித்தல் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றில் தன்னம்பிக்கையை வளர்த்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 1.1: அன்றாட வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள், அனுபவங்கள் மற்றும் பல்வேறு தலைப்புகள், பாத்திரங்களை ஆர்வத்துடன் நடித்தல்.</td></tr>
<tr><td>03AE26</td><td>குடும்பம் மற்றும் சுற்றியுள்ள மனிதர்களின் அன்றாட செயல்பாடுகளைக் கவனித்து நடித்தல்.</td></tr>
<tr><td>03AE27</td><td>சுற்றியுள்ள விலங்குகள் மற்றும் பறவைகளைக் கவனித்து, அவற்றின் அசைவுகளைப் பின்பற்றி ஆர்வத்துடன் நடித்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 1.2: நாடகக் கலையில் பரஸ்பரத் தொடர்பைப் பேணி, வகுப்பில் கூட்டுப்பணியின் போது தனது சொந்தக் கருத்துக்களை விவாதித்தல்.</td></tr>
<tr><td>03AE28</td><td>அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களைப் பாத்திரங்களாகக் கற்பனை செய்து, அவற்றைக் கொண்டு தனது நடிப்பை வெளிப்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட நோக்கம் : CG - 2: கலையின் மூலம் தனது கற்பனைத் திறன் மற்றும் படைப்பாற்றலைச் சுதந்திரமாகப் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td>03AE29</td><td>நடிப்பிற்குத் தேவையான பொருட்கள் பற்றி குழுவில் கலந்துரையாடித் தேர்ந்தெடுத்தல்.</td></tr>
<tr><td>03AE30</td><td>நடிப்பின் போது வகுப்பிலுள்ள சக மாணவர்களின் பின்னணி வடிவமைப்புக்கு (Set Design) உதவுதல்.</td></tr>
<tr><td>03AE31</td><td>சுற்றியுள்ள சூழலில் ஏற்படும் ஒலிகளைப் பயன்படுத்தி, நடிப்பிற்கு ஏற்றவாறு ஒலி விளைவுகளை உருவாக்குதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 2.2: நாடகத்தில் உள்ள பல்வேறு கூறுகள் மற்றும் கலை வெளிப்பாடுகளை ஒப்பிட்டு, அவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துதல்.</td></tr>
<tr><td>03AE32</td><td>தேர்ந்தெடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப மீண்டும் ஒருமுறை நடித்துக் காட்டுதல்.</td></tr>
<tr><td>03AE33</td><td>நடித்த பிறகு மேற்கொள்ளப்பட்ட விவாதங்கள் மற்றும் ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட்ட முறையில் மீண்டும் நடித்தல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட நோக்கம் : CG - 3: நாடகத்தின் அடிப்படை செயல்முறைகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களில் தேர்ச்சி பெறுதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 3.1: நாடகத்திற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், சாதனங்கள் மற்றும் நுட்பங்களைத் தேர்ந்தெடுத்தல்.</td></tr>
<tr><td>03AE34</td><td>நாடகக் கதைக்குத் தேவையான பொருட்கள் நேரடியாகக் கிடைக்காதபோது, மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td>03AE35</td><td>நடிப்பிற்குத் தேவையான ஆடைகள் மற்றும் ஒப்பனைகளை முறையாகத் தேர்ந்தெடுத்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 3.2: தனிப்பட்ட மற்றும் குழுவாக நாடகம் தயாரிக்கும்போது திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் முன்வைத்தல் போன்ற படிகளைப் பின்பற்றுதல்.</td></tr>
<tr><td>03AE36</td><td>நாடகத்தில் வரும் பல்வேறு சூழல்கள் அல்லது கதைகளைத் திட்டமிட்டு உருவாக்குதல்.</td></tr>
<tr><td>03AE37</td><td>நடிக்கும் போது தேவையான தொழில்நுட்பக் கூறுகளை (ஒளி, ஒலி போன்றவை) சரியாகப் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td>03AE38</td><td>வகுப்பறை நாடகக் கருத்தாக்கத்தின் அடிப்படையில் மனித உடலமைப்பைக் கொண்டு ஒரு திரையை அல்லது பின்னணியை உருவாக்குதல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட நோக்கம் : CG - 4: சுற்றியுள்ள அழகைக் கண்டறிந்து, உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார மரபுகள் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 4.1: இயற்கையில் உள்ள கூறுகளைக் கண்டறிந்து, அவற்றின் அழகியல் பண்புகளை நடிப்பில் விவரித்தல்.</td></tr>
<tr><td>03AE39</td><td>இயற்கையான வெளிச்சத்தைக் கொண்டு நடிப்பைத் திட்டமிடுதல்.</td></tr>
<tr><td>03AE40</td><td>நாடகச் சூழலைக் கருத்தில் கொண்டு அதற்குரிய ஆடைகளை வடிவமைத்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 4.2: உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி அறிய ஆர்வம் காட்டுதல்.</td></tr>
<tr><td>03AE41</td><td>பகுதியில் நடைபெறும் கலாச்சார நிகழ்வுகள் குறித்து குழுவாகக் கலந்துரையாடுதல்.</td></tr>
<tr><td>03AE42</td><td>உள்ளூர் நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலைஞர்களைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுதல்.</td></tr>
<tr><th colspan="2">இசை</th></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட நோக்கம் : CG - 1: பல்வேறு கலை வடிவங்களின் மூலம் தனது உணர்வுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதில் தன்னம்பிக்கையை வளர்த்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 1.1: பல்வேறு இசை வடிவங்கள் மூலம் அன்றாட வாழ்க்கையின் அனுபவங்களைத் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்துதல்.</td></tr>
<tr><td>03AE43</td><td>தனக்குத் தெரிந்த இசை மற்றும் பாடல்களை மகிழ்ச்சியுடன் முணுமுணுத்தல்.</td></tr>
<tr><td>03AE44</td><td>பாடுதல் அல்லது இசைக்கருவிகளை வாசிப்பதில் ஆர்வத்துடன் பயிற்சி செய்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 1.2: இசைக் கூட்டுப் பணியின் போது சக மாணவர்களின் கருத்துக்கள் மற்றும் செயல்பாடுகளை விவாதித்தல்.</td></tr>
<tr><td>03AE45</td><td>குழுவாகப் பாடும் போது அல்லது வாசிக்கும் போது ஏற்படும் ஒத்திசைவு பற்றி விவாதித்துத் தனது கருத்தைக் கூறுதல்.</td></tr>
<tr><td>03AE46</td><td>ஆசிரியர் அல்லது சக மாணவர்கள் பாடலில் பரிந்துரைக்கும் மாற்றங்களைக் கவனித்து, அதற்கேற்பப் பாடுதல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட நோக்கம் : CG - 2: கலையின் மூலம் தனது கற்பனைத் திறன் மற்றும் படைப்பாற்றலைச் சுதந்திரமாகப் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 2.1: பல்வேறு வகையான பாடுதல், வாசித்தல் (தனி நபர், குழு) ஆகியவற்றில் தாளம் மற்றும் லயம் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.</td></tr>
<tr><td>03AE47</td><td>தெரிந்த பாடல்கள் (எ.கா. குழந்தைகள் பாடல்கள், நடிப்புப் பாடல்கள்) கேட்டு ரசித்தல்.</td></tr>
<tr><td>03AE48</td><td>வெவ்வேறு பாடும் முறைகளை (தனிப் பாடல், குழுப் பாடல்) அறிந்து பாடுதல்.</td></tr>
<tr><td>03AE49</td><td>தனி நபர் அல்லது குழுவாகப் பாடிப் பயிற்சி செய்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன் : C - 2.2: பாடல்கள் மற்றும் இசை வெளிப்பாடுகளை ஒப்பிட்டு, அவற்றின் பல்வேறு கூறுகளை (லயம், தாளம், சுருதி, உணர்வு) உணர்ந்து காட்டுதல்.</td></tr>
<tr><td>03AE50</td><td>பாடல்களின் பல்வேறு வகைகளைப் பற்றிப் பேசுதல்.</td></tr>
<tr><td>03AE51</td><td>பல்வேறு இசை வடிவங்களைக் கேட்டு அடையாளம் காணல்.</td></tr>
<tr><td>03AE52</td><td>சாஸ்திரீய இசையின் அடிப்படை கலைச்சொற்களைக் கூறுதல் (எ.கா. சங்கீத ஆரோஹணம், அவரோஹணம்).</td></tr>
</table>

| | |
|---|---|
| 03AE53 | எளிய அலங்காரங்களின் அமைப்பைக் கேட்டுப் பாடுதல். |
| **பாடத்திட்ட நோக்கம் : CG – 3: இசையின் அடிப்படை செயல்முறைகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களில் தேர்ச்சி பெறுதல்.** | |
| **திறன் : C – 3.1: இசையைத் தயாரிக்கும்போது பாடல்கள், வாசித்தல் மற்றும் இசையமைப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பைத் தேர்ந்தெடுத்தல்.** | |
| 03AE54 | சுற்றியுள்ள பல்வேறு ஒலிகளைக் கேட்டு அடையாளம் காணுதல். |
| 03AE55 | சுற்றியுள்ள பல்வேறு ஒலிகள் மற்றும் தாளங்களை உருவாக்குவதன் மூலம் லயம் மற்றும் தாளத்தைப் பயன்படுத்திப் பாடுதல்/இசைத்தல். |
| **திறன் : C – 3.2: இசைப் பயிற்சிகள் மற்றும் கூட்டுப் பாடுதலில் பங்கேற்க ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்குதல்.** | |
| 03AE56 | ஒலிகள் மற்றும் இசைக்கருவிகளின் உதவியுடன் பாடல்களைப் பாடும்போது வெவ்வேறு யோசனைகளை முன்வைத்து நடித்தல்/பாடுதல். |
| 03AE57 | பல்வேறு பாடல்களைத் தொடர்ந்து பாடிப் பயிற்சி செய்தல். |
| 03AE58 | பயிற்சிகளின் மூலம் தயார் செய்யப்பட்ட பாடல்களைச் சிறப்பாக முன்வைத்தல். |
| **பாடத்திட்ட நோக்கம் : CG – 4:** சுற்றியுள்ள அழகைக் கண்டறிந்து, உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார மரபுகள் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்துதல். | |
| **திறன் : C – 4.1:** இயற்கையில் உள்ள இசைக் கூறுகளைக் கண்டறிந்து, அவற்றின் அழகியல் பண்புகளை விவரித்தல். | |
| 03AE59 | சுற்றியுள்ள சூழலில் கேட்கும் ஒலிகளை இசையின் சூழலோடு இணைத்தல். |
| 03AE60 | உள்ளூர் பகுதியில் உள்ள இசைக் கலைஞர்களைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளளுதல். |
| **திறன் : C – 4.2:** உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி அறிய ஆர்வம் காட்டுதல். | |
| 03AE61 | உள்ளூர்/வட்டார நாட்டுப்புறப் பாடல் வடிவங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்று, அதில் பங்கேற் நல். |
| **நடனம்** | |
| பாடத்திட்ட நோக்கம் : CG - 1: நடனத்தின் மூலம் மனித உணர்வுகளை ஆராய்தல், வெளிப்படுத்துதல் ஆகியவற்றில் தன்னம்பிக்கையை வளர்த்தல். | |
| **திறன் : C – 1.1:** தமக்குத் தெரிந்த நடன அசைவுகளை ஆர்வத்துடன் செய்து காட்டுதல். | |
| 03AE62 | தெரிந்த நடனங்களில் உள்ள உடல் அசைவுகளை முறையாக, தாளத்திற்கு ஏற்பச் செய்து காட்டுதல். |
| **திறன்** : C - 1.2: நடன அசைவுகள் மூலம் குழுவாகக் கூட்டு நடிப்பு/நடனம் செய்யும்போது கற்பனைகள் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்தல். | |
| 03AE63 | நடனம் மற்றும் உடல் அசைவுகளில் குழுவாக இணைந்து செயலாற்ற ஒத்துழைத்தல். |
| **பாடத்திட்ட நோக்கம்** : CG - 2: கலையின் மூலம் தனது கற்பனைத் திறன் மற்றும் படைப்பாற்றலைச் சுதந்திரமாகப் பயன்படுத்துதல். | |
| திறன் : C - 2.1: அன்றாடச் செயல்கள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் நடன அசைவுகளின் வரிசையை உருவாக்கி முன்வைத்தல். | |
| 03AE64 | அன்றாட வாழ்க்கையில் செய்யப்படும் செயல்களின் உடல் அசைவுகளை வரிசைப்படுத்தி நடனமாக வெளிப்படுத்துதல். |
| **திறன்** : C - 2.2: வகுப்பில் முன்வைக்கப்படும் பல்வேறு நடன அசைவுகள், பாணிகள், தாளம், முத்திரைகள் ஆகியவற்றை ஒப்பிட்டு வேறுபாடுகளை உணர்தல். | |
| 03AE65 | நடனத்தில் உள்ள லயம், தாளம் ஆகியக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துதல் . |
| **பாடத்திட்ட நோக்கம்** : CG - 3: நடனத்தின் அடிப்படை செயல்முறைகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களில் தேர்ச்சி பெறுதல். | |
| **திறன் : C – 3.1:** நடனத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள், உடைகள் மற்றும் நுட்பங்களைத் தேர்ந்தெடுத்தல். | |
| 03AE66 | நடனத்திற்காகப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய இசைக்கருவிகளை அடையாளம் கண்டு அவற்றின் பெயர்களைக் கூறுதல். |
| 03AE67 | பல்வேறு நடன ஆடைகளைக் கவனித்து, அது எந்த நடன வகைக்கானது என்று அடையாளம் காணுதல். |
| 03AE68 | வெவ்வேறு நடன ஆடைகளைக் கவனித்து, சில அசைவுகளைச் செய்து காட்டுதல். |
| **திறன்** : C - 3.2: நடன அசைவுகளை வரிசைப்படுத்துவதிலும், கூட்டுப் பயிற்சியிலும் தனது கற்பனைத் திறனைப் பங்களித்தல். | |
| 03AE69 | தனது கற்பனையின் அடிப்படையில் குறிப்பிட்ட தலைப்பைப் பற்றி விவாதித்து, அதற்கேற்ப நடன அசைவுகளை உருவாக்கி ஆடுதல். |
| **பாடத்திட்ட நோக்கம்** : CG - 4: சுற்றியுள்ள அழகைக் கண்டறிந்து, உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார மரபுகள் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்துதல். | |
| **திறன்** : C - 4.1: இயற்கையில் உள்ள அசைவுகளைக் கண்டறிந்து, அவற்றின் அழகியல் பண்புகளை விவரித்தல். | |
| 03AE70 | இயற்கையில் உள்ள கூறுகளை விவரிக்கும் பாடல்களுக்கு ஏற்ப உடல் அசைவுகள் மற்றும் நடனத்தை வெளிப்படுத்துதல். |
| **திறன்** : C - 4.2: உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி அறிய ஆர்வம் காட்டுதல். | |
| 03AE71 | பல்வேறு உள்ளூர் நடனக் கலைஞர்கள் மற்றும் உள்ளூர் நடன வகைகள் பற்றிய தகவல்களைக் கூறுதல். |



குறிப்பு: சிறப்பு தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல்-கற்றல் செயல்பாடுகளின் போது சைகை மொழி (Sign Language) மற்றும் பிற துணை கற்றல் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். சிறப்பு தேவையுடைய குழந்தைகள் எந்த முறையில் எளிதாகக் கற்க முடிகிறதோ, அந்த முறையில் அவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள உரிய வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

# பொருளடக்கம்

## காட்சிக்கலை


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1. வடிவமைப்புகளின் வேடிக்கை | 1 |
| 2 எழுத்துகளின் உலகில் | 9 |
| 3 எனது ஓவியம்! எனது கற்பனை | 12 |
| 4 பொருள்களின் உலகில் | 16 |
| 5 முப்பரிமாண கலைப்படைப்பு | 19 |


## நாடக மேடை


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 6 வாருங்கள் நடிப்போம். | 22 |
| 7 நாடகத்திற்குத் தயாராவோம் | 28 |
| 8 வாருங்கள் நாடகமேடைக்குச் செல்வோம் | 32 |


## இசை


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 9. அனைவரும் சேர்ந்து பாடுவோம் | 39 |
| 10. தனிப் பாடல் மற்றும் இருவர் பாடல் | 47 |
| 11. இசைப் பாரம்பரியம் | 53 |
| 12. இசையோடு நட்பு | 60 |


## நடனம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 13. நடனமாடி மகிழ்வோம் | 66 |
| 14. நடனமயமான வாழ்க்கை | 71 |
| 15. நடனத்தின் தோழர்கள் | 75 |
| 16. கலைப் பண்பாடு | 82 |

# காட்சிக்கலை



# 1. வடிவமைப்புகளின் வேடிக்கை

இன்று நம்மைச் சுற்றியுள்ள அழகான உலகத்தைச் சுற்றிப் பார்க்க போகிறோம். நீங்கள் எப்போதாவது ஒரு சேலையின் ஓரத்தையோ அல்லது ஒரு சட்டையிலுள்ள சிறிய சதுரங்களையோ கவனித்திருக்கிறீர்களா? நாம் வீட்டிற்கு வெளியே காலடி வைத்தவுடன் வாசலில் உள்ள வரவேற்பு வளைவிலும் வாசலில் போடப்பட்டுள்ள விரிப்பிலும் ஓர் ஒற்றுமையைக் காண்கிறோம்.





ஒரு கோடு, ஒரு வடிவம் அல்லது ஒரு நிறம் ஒரு குறிப்பிட்ட வரிசையில் மீண்டும் மீண்டும் வரும்போது ஓர் அழகான வடிவமைப்பு உருவாகுகிறது. வடிவமைப்பு என்பது ஒரு படம் மட்டுமல்ல, அது கோடுகள், வடிவங்கள் மற்றும் நிறங்களின் மீண்டும் மீண்டும் வரும் ஒரு அமைப்பு அல்லது லயம் ஆகும்.





உங்கள் வீட்டின் தரைத்தளத்தில், ஒரு சன்னலின் இரும்புக் கம்பிகளில், நீங்கள் வரையும் கோலத்தில் கூட வடிவங்கள் மறைந்திருக்கின்றன. சில சமயங்களில் அவை நேர்கோட்டிலும், சில சமயங்களில் வளைவாகவும் இருக்கும், சில நேரங்களில் முக்கோணமாகவும் இருக்கும். இன்று நாம் எளிய கோடுகளைப் பயன்படுத்தி இந்த வடிவமைப்பு வேடிக்கையை அனுபவிக்கப் போகிறோம். எனவே நமது கற்பனை திறனால் காகிதத்தில் வடிவமைப்பு உலகிற்கு உயிர் கொடுக்கலாமா!

**வடிவமைப்பு: கோடுகள் மற்றும் வடிவங்கள்.**

அழகான வடிவமைப்பிற்கு நீங்கள் கோடு மற்றும் சதுர வடிவங்களுடன். நட்பு கொள்ள வேண்டும். ஏனெனில் கோடுகளும் வடிவங்களும் வடிவமைப்பின் அடிப்படையாகும்.

**கோடுகளின் அறிமுகம்:** செங்குத்து, கிடைமட்ட, சாய்வு, துண்டிக்கப்பட்ட, வளைந்த, நெளிந்த வடிவில் கோடுகள் உள்ளன.



செங்குத்து கோடு | கிடைமட்டக் கோடு | சாய்வுக் கோடு | துண்டிக்கப்பட்டக் கோடு | வளை கோடு | வளைந்து நெளிந்த கோடு

- அன்றாட வாழ்விலிருந்து பல்வேறு வடிவங்களைக் காட்டும் பல்வேறு எடுத்துக்காட்டுகளைக் காட்டி மற்ற உதாரணங்களைப் பற்றி விசாரிக்கவும்.
- அந்த வடிவமைப்புகளில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு வடிவங்களைப் பற்றி விவாதிக்கவும்.

CG – 4
C –4.1
LO– 03AE21

நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு வடிவங்களைப் பார்க்கும்போது சில வடிவியல் வடிவங்களையும் சில இயற்கை வடிவங்களையும் நாம் காண்கிறோம்.

**வடிவியல் வடிவங்கள்:** முக்கோணம், சதுரம், செவ்வகம் வட்டம், அரை வட்டம்.



முக்கோணம் சதுரம் செவ்வகம் வட்டம் அரைவட்டம்

**இயற்கை வடிவங்கள்:** இலைகள், பூக்கள், பறவைகள் விலங்குகள், நிலா மற்றும் நட்சத்திரங்கள்



### கோடு மற்றும் வடிவங்களைப் பயிற்சி செய்வோம்:

தாளில் பல்வேறு வகையான கோடுகளை வரையுங்கள். பின்னர் வட்டங்கள், பல்வேறு வடிவங்கள் மற்றும் இயற்கை வடிவங்களைக் கையால் வரையப் பயிற்சி செய்யுங்கள்.

### கோடுகளைப் பயன்படுத்தி வடிவத்தை உருவாக்குவோமா!

பின்வரும் கட்டத்தில் செங்குத்து மற்றும் நெளிந்த கோடுகளை மட்டும் மீண்டும் மீண்டும் வரையவும். பாருங்கள்! ஓர் எளிமையான அதேசமயம் கவர்ச்சியான வடிவமைப்பு உருவாக்கப்படுகிறது. உங்கள் குறிப்பேட்டில் வெவ்வேறு கோடுகளைப் பயன்படுத்தி வடிவமைப்பை உருவாக்கவும்.

### வடிவங்களை பயன்படுத்தி ஒரு வடிவமைப்பை உருவாக்குவோம்

கீழே உள்ள கட்டத்தில் சதுரங்கள், வட்டங்கள்- மற்றும் முக்கோணங்கள் போன்ற வடிவியல் வடிவங்களை மட்டுமே பயன்படுத்தவும். ஒரு வடிவமைப்பை உருவாக்கி, அவற்றை உங்களுக்கு பிடித்த முறையில் அடுக்கவும்.

- நீங்கள் வெவ்வேறு வடிவங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.
- ஆரம்பத்தில் கோடுகளை மட்டும் பயன்படுத்தி வடிவமைப்பையும் பின்னர், வடிவங்களை மட்டும் பயன்படுத்தி வடிவமைப்பையும் உருவாக்க வேண்டும்.
- கோடுகள் மற்றும் வடிவங்கள் இரண்டையும் பயன்படுத்தி வடிவமைப்பை உருவாக்க வாய்ப்பை வழங்கவும்.

CG – 2
C –2.1
LO7/12/21

**கோடுகள் மற்றும் வடிவங்களைப் பயன்படுத்தி அழகான வடிவமைப்பை உருவாக்குவோம்!**

இதுவரை நீங்கள் கற்றுக்கொண்ட பல்வேறு கோடுகளையும் இயற்கையான வடிவங்களையும் பயன்படுத்தி கீழே உள்ள கட்டத்தில் ஓர் அழகான வடிவமைப்பை உருவாக்கவும்.

**அடர் மற்றும் பிரகாசமான நிறங்களின் அறிமுகம்**

நீங்கள் ஏற்கனவே பல்வேறு நிறங்களையும் அவற்றின் பெயர்களையும் நன்கு அறிந்திருப்பீர்கள். இப்பொழுது அடர் மற்றும் பிரகாசமான நிறங்களைக் குறித்து அறிந்து கொள்வோம்.

இப்பொழுது இந்த நிறங்களைக் கவனித்து உங்களுக்கு எந்த நிறங்கள் பிரகாசமான நிறமாகவும் எந்த நிறங்கள் அடர் நிறமாகவும் தோன்றுகின்றன எனக் கூறுங்கள்.



- **அடர் நிறங்கள்:** நீலம்,அடர் பச்சை, ஊதா, கருப்பு ஆகியவை அடர் நிறங்கள் ஆகும்.
- **பிரகாசமான நிறங்கள்:** மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகியவை பிரகாசமாகவும் வெளிச்சமாகவும் தோன்றும்.

**நினைவில் கொள்ளுங்கள்:** ஒரு வடிவமைப்பை நிறத்தால் நிரப்பும்போது அது உயிரோட்டமாகத் தோன்றுகிறது. வடிவமைப்பில் ஒரு அடர் நிறத்தையும், ஒரு பிரகாசமான நிறத்தையும் மாற்றி மாற்றி பயன்படுத்துவது அதைத் தனித்து எடுப்பாகத் தெரியச் செய்கிறது.

**கோட்டோவியம் மற்றும் வண்ணம் தீட்டுவோம்:**

இப்போது கீழே கட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களுக்குப் பிடித்த கோடுகள் மற்றும் வடிவமைப்பை பயன்படுத்தி பெட்டியில் உள்ள வடிவமைப்பை வரையுங்கள். முதல் கட்டத்தில் உள்ள வடிவமைப்பிற்கு பிரகாசமான நிறத்தில் வண்ணம் தீட்டுங்கள். இரண்டாவது கட்டத்தில் உள்ள வடிவமைப்பிற்கு அடர் நிறத்தில் வண்ணம் தீட்டுங்கள்.

**வடிவமைப்பை வரைந்து பிரகாசமான நிறத்தால் வண்ணம் தீட்டவும்.**

- அடர் மற்றும் பிரகாசமான வண்ணங்களின் வகைகளை அறிமுகப்படுத்தவும்.
- வடிவமைப்பிற்கு அடர் மற்றும் பிரகாசமான நிறங்களால் வண்ணம் தீட்டச் சொல்லுங்கள்.

CG –2
C –2.2
LO– 03AE12/13

வடிவமைப்பை வரைந்து அடர் நிறங்களில் வண்ணம் தீட்டவும்.

வடிவமைப்பை வரைந்து அடர் மற்றும் பிரகாசமான நிறங்களில் வண்ணம் தீட்டவும்.

## அச்சுப்பதித்தல் மூலம் வடிவமைப்பு

இதுவரை நாம் கோடுகள், வடிவங்கள் மற்றும் வண்ணங்களைப் பயன்படுத்தி அழகான வடிவமைப்புகளை உருவாக்கி வண்ணம் தீட்டியுள்ளோம். இப்போது பின்வரும் வடிவமைப்பைப் பாருங்கள். நீங்கள் என்ன வேறுபாடுகளைக் காண்கிறீர்கள் என்று விவாதிக்கவும். அச்சுப்பதித்தலின் மூலம் நீங்களும் ஒரு புதிய வடிவமைப்பை உருவாக்கலாம்.





எனவே பல்வேறு வகையான அச்சுகள் மற்றும் அச்சுப்பதித்தல் முறைகளைப் பற்றிப் புரிந்துகொள்வோம்.

அச்சுப்பதித்தல் என்பது வடிவமைப்பின் ஓர் எளிய மாதிரியை உருவாக்கும் நுட்பமாகும். நம்மைச் சுற்றியுள்ள எந்தப் பொருளின் அச்சுகளையும் நாம் எடுக்கலாம். ஆயினும் அந்த அச்சு காகிதத்தில் சரியாக பதிய வேண்டும். எடுத்துக்காட்டாக: வெண்டைக்காய், வெங்காயம், பேனாவின் முனை, இலைகள், விரல்கள், மடித்த காகிதம் போன்றவை.

நீங்கள் அச்சு எடுக்க விரும்பும் பொருளின் மேல் பக்கத்தை வண்ணத்தில் தோய்த்து, அதன் வடிவம் காகிதத்தில் படியும்படி மெதுவாக அழுத்தவும். இதோ சில அச்சுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்த்து, அவை, எந்த பொருட்களுடையவை என்று நீங்கள் அடையாளம் கண்டு எழுதுங்கள்.

- அச்சிடுவதன் மூலம் உருவாக்கப்பட்ட வடிவமைப்புகளின் எடுத்துக்காட்டுகளைக் காட்டி அவை எந்த பொருள்களிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதை அடையாளம் காணுமாறு கூறுங்கள்.
- அச்சிடுதலைப் பயன்படுத்தி ஒரு வடிவமைப்பை உருவாக்கச் செய்யுங்கள்.

CG – 2
C –2.2
LO–03AE13,/16

அச்சுகளை அடையாளங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்



.......................



.......................



.......................



.......................

**அச்சுப பதித்தல் மூலம் ஒரு வடிவமைப்பை உருவாக்குவோம்.**

உங்கள் ஓவியம் குறிப்பேட்டில் ஒரு வெண்டைக்காயை வெட்டி, அதை வண்ணத்தில் நனைத்து அதன் அச்சுகளை ஒரு நேர்க்கோட்டில் தொடராக உருவாக்கவும். அந்த தொடரில் இரண்டு அச்சுகளுக்கு இடையில் ஒரு விரல் அச்சைப் பதிப்பதன் மூலம் ஒரு புதிய வடிவமைப்பை உருவாக்கவும்.

மிகவும் நன்று!

இப்போது உங்கள் குறிப்பேட்டில் இதுபோன்ற கட்டங்களை உருவாக்கி, பல்வேறு பொருள்களின் அச்சுகளை எடுத்து அழகான வடிவமைப்பை உருவாக்கப் பயிற்சி செய்யுங்கள். உங்களுக்குப் பிடித்த வடிவமைப்பை உங்கள் ஆசிரியரிடம் காட்டுங்கள்.

**மேற்பரப்புத் தன்மை உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு**

ஒருபொருளின் மேற்பரப்பு தொடுவதற்கு எப்படி இருக்கிறது (சொரசொரப்பாக அல்லது மென்மையாக) என்பது மேற்பரப்புத் தன்மை என்று அழைக்கப்படுகிறது. சொரசொரப்பான மேற்பரப்பை அடிப்படையாகக் கொண்டு காகிதத்தின் மேல் நீங்கள் ஒரு அமைப்பை உருவாக்கலாம். ஒரு அமைப்பை உருவாக்க கீழ்க்கண்ட படிகளைப் பின்பற்றவும்.

- ஒரு நாணயம், சாக்குப்பை, சீப்பு, சணல் பை, ஒரு சொரசொரப்பான கண்ணாடித் துண்டு, ஒரு இலையின் நரம்புகளின் மேற்பரப்பு, மரத்தின் பட்டையின் தேர்ந்தெடுக்கவும்.
- நீங்கள் விரும்பும் பொருளை காகிதத்தின் கீழே வைக்கவும். ஒரு பென்சிலைக் கொண்டு அதன்மீது மெதுவாகக் கோடு வரையுங்கள். இப்போது காகிதத்தில் ஓர் அழகான வடிவமைப்பு தோன்றுவதைக்காண்பீர்கள்.

- **பல்வேறு பொருள்களைக் கொண்டு அச்சுப் பதிக்கும் பயிற்சி செய்வதற்கு வாய்ப்புகளை வழங்கவும்.**

CG – 3
C –3.1
LO– 03AE13, 16



- தயாரான அமைப்புகளை முக்கோணம், சதுரம் வட்டம், அரைவட்டம் நீள்வட்டம் போன்ற வடிவங்களில் வெட்டவும்.
- வெவ்வேறு வண்ணங்களில் உள்ள இந்தப் பல்வேறு வடிவங்களைத் தாளில் ஒட்டி ஒரு அழகான கோலத்தை உருவாக்கவும்.
- மேற்பரப்புத் தன்மையை உருவாக்க வண்ணப் பென்சில்கள் மற்றும் மெழுகு வண்ணக்கோல்களைப் பயன்படுத்தலாம்.

## கொலாஜ் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைப்பு



இப்போது வடிவமைப்பின் அடுத்த மாதிரியைப் பாருங்கள். அதில் ஏதேனும் வித்தியாசத்தைக் கவனிக்கிறீர்களா? உங்கள் குழுவில் அதைப்பற்றி விவாதிக்கவும்.

அருகிலுள்ள படம் வண்ணம் தீட்டப்படவில்லை அல்லது வண்ணத்தைப் பயன்படுத்தி உருவாக்கப் படவில்லை, மாறாக, இது காகிதத்தின் சிறிய துண்டுகளை ஒன்றாக ஒட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இது 'கொலாஜ்' ஓவியம் என்று அழைக்கப்படுகிறது. கொலாஜ் என்பது பல்வேறு வகையான காகிதம், துணி அல்லது பிறப் பொருள்களின் சிறிய துண்டுகளை ஒன்றாக ஒட்டி உருவாக்கப்படும் ஒரு கலைப்படைப்பாகும். ஓர் ஓவியத்தில் கொலாஜ் நுட்பத்தைப் பயன்படுத்துவது ஓர் அழகானக் கலைப்படைப்பை உருவாக்குகிறது.

- பல்வேறு மேற்பரப்புகளின் தன்மையை எவ்வாறு உருவாக்குவது என்பதை செய்து காட்டி வெவ்வேறு அமைப்புகளை பெற வாய்ப்பைகளை வழங்கவும்.
- பல்வேறு அமைப்புகளை பயன்படுத்திப் ஓவியங்கள் / வடிவமைப்புகளை உருவாக்க ஊக்குவிக்கவும்.

CG – 3
C –3.1, 3.2
LO– 03AE14, 18

**காகித வேலைப்பாட்டின் மூலம் ஒரு வடிவமைப்பை உருவாக்குவோம்.**

இதற்கு பழைய செய்தித்தாள்கள், பத்திரிகைகளின் வண்ணத் துண்டுகள், கத்திரிக்கோல், பசை மற்றும் வெள்ளைத்தாள் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளவும். இப்போது கீழே உள்ளபடி செயல்களைச் செய்யவும்.

1. வண்ணத் தாளில் இருபது சிறிய முக்கோணங்கள், வட்டங்கள் மற்றும் சதுரங்களை வெட்டவும்.
2. வெள்ளைத் தாளில் பென்சிலால் 5 செ. மீ அகலமுள்ள ஒரு பட்டையை வரையுங்கள்.
3. இப் பட்டையின் மீது நீங்கள் முன்பு வெட்டிய வண்ண வடிவங்களை ஒரு குறிப்பிட்ட வரிசையில் ஒட்டவும். (எ.கா. ஒரு முக்கோணம், ஒரு வட்டம்).
4. வடிவங்களுக்கு இடையில் சிறிய இடைவெளி விட்டு அங்கு வண்ணத் தாளின் மெல்லிய நீளத் துண்டுகளை ஒட்டவும்.
5. பாருங்கள்! உங்கள் 'காகித வேலைப்பாட்டு கொலாஜ் வடிவமைப்பு' தயாராகிவிட்டது. செய்து முடித்த வடிவமைப்பை உங்கள் ஆசிரியரிடம் காட்டுங்கள்.

   பயிற்சிக்காக மேலும் பல வண்ண காகிதத் துண்டுகளில் இருந்து வடிவமைப்பைத் தயார் செய்யுங்கள்.

**காகித வலை வடிவமைப்பு:**

இதுவரை காகிதத்தின் மேல் வடிவங்களில் வேலை செய்துள்ளோம். ஆனால் நீங்களும் காகிதத்திலிருந்தே கூட வடிவமைப்புகளை உருவாக்கலாம் தெரியுமா!

இதற்கு உங்களுக்குத் தேவைப்படுபவை....

- வண்ண அல்லது வெள்ளைச் சதுரக் காகிதம்.
- சிறிய கத்திரிக்கோல் [முனை மழுங்கியது; குழந்தைகளுக்கு பாதுகாப்பானது.]
- பென்சில்.



**இபபோது படிப்படியாக வடிவமைப்பை உருவாக்குவோம்.**

**படி.1:** காகித்தை மடித்தல்.

- முதலில் ஒரு வண்ணத்தாளின் சதுரத் துண்டை எடுத்துக் கொள்ளுங்கள்.
- ஒரு செவ்வகத்தை உருவாக்க, காகிதத்தை நீளவாக்கில் பாதியாக மடிக்கவும்.



**படி.உ:** வடிவத்தை வரைதல்

- இப்போது தாளின் மடிக்கப்பட்ட மற்றும் மடிக்கப்படாத பக்கங்களில், பென்சிலால் பல்வேறு வடிவங்களை வரையுங்கள்.
- எ.கா.: ஒரு சிறிய முக்கோணம், ஒரு அரைவட்டம் அல்லது வட்டம் உங்களுக்கு பிடித்தமான ஏதேனும்

- இந்த நுட்பத்தின் எடுத்துக்காட்டுகளைச் செய்துகாட்டி கொலாஜ் நுட்பத்தின் கருத்தை விளக்குதல்.
- பல்வேறு வண்ணக் காகிதங்கள், பத்திரிக்கைகள், பத்திரிக்கைகளின் வண்ண கத்தரிப்புகளைப் பயன்படுத்தி ஒரு கொலாஜ் உருவாக்க அறிவுறுத்தவும்.

CG – 2
C –2.2
LO– 03AE 12

ஒரு வடிவம்

- காகிதத்தின் மைய மடிப்பை முழுமையாக வெட்டி விடாமல் பார்த்துக் கொள்ளவும். இல்லையெனில் அது கிழிந்து கொலாஜ் பிரிந்துவிடும்.



**படி.3:** கத்திரிக்கோலால் வெட்டுதல்.

- பென்சில் குறிகளைப் பின்பற்றி, கத்தரிக்கோலால் காகிதத்தை மெதுவாக வெட்டவும்.
- சிறிய வெட்டியத் துண்டுளைத் தனியாக எடுத்து வைக்கவும்.



**படி.4:** வடிவமைப்பை விரித்தல்.

- இப்போது காகிதத்தின் மடிப்புகள் அனைத்தையும் கவனமாக விரிக்கவும்.
- காகிதத்தில் ஓர் அழகான, சீரான வடிவத்தை நீங்கள் காண்பீர்கள்.



**ப.டி.5:** வடிவமைப்புத்தாளை ஒட்டுதல்

வடிவமைப்புள்ள காகிதத்தை உங்கள் குறிப்பேட்டில் ஒட்டவும்.

இங்கு நாம் காகிதத்தை சதுரமாக மடித்து ஒரு வடிவத்தை உருவாக்கியுள்ளோம். ஆனால் நீங்கள் காகிதத்தை வெவ்வேறு வழிகளில் மடித்து, வண்ணக் காகிதத்தில் ஒட்டுவதன் மூலமும் அழகான வடிவமைப்புகளைப் பெறலாம்.

## எனது செயல்

1. உங்கள் குறிப்பேட்டில் ஐந்து வெவ்வேறு வகையானக் கோடுகளைப் பயன்படுத்தி ஒரு அழகான வடிவமைப்பை உருவாக்கவும்.
2. பல்வேறு அச்சுகளைப் பயன்படுத்தி வாழ்த்து அட்டை ஒன்றை உருவாக்கவும்.
3. ஒரு முக்கோணத்தை வரைந்து அதை வடிவமைப்புகளால் அலங்கரிக்கவும். பிரகாசமான நிறங்களை பட்டும் பயன்படுத்தி வண்ணம் தீட்டவும்.
4. ஒரு பழைய செய்தித்தாளில் உள்ள விளம்பரங்களில் இருந்து வண்ணப்பகுதிகளைத் தேர்ந்தெடுக்கவும். அதனைக் கையால் சிறிய வட்டத் துண்டுகளாகக் கிழிக்கவும். இந்தத் துண்டுகளை நேராக ஒட்டி, வண்ணமயமான மணி மாலையை உருவாக்கவும்.
5. ஒரு தாளில் இருந்து ஐந்து முக்கோணங்களையும் ஐந்து வட்டங்களையும் வெட்டவும். ஐந்து வடிவங்களைப் பயன்படுத்தி பலவிதமாக வடிவங்களை உருவாக்கி உங்கள் குறிப்பேட்டில் ஒட்டவும்.

- **குழந்தைகளின் கலைப்படைப்புகளுக்காக வகுப்பில் கண்காட்சியை ஏற்பாடு செய்யவும்.**

CG – 2,3,4
C –2.1, 2.2, 3.1, 3.2, 4.1
LO–03AE12/13/16/21/23/14/18

# 2. எழுத்துகளின் உலகில்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கையெழுத்து மாதிரிகளை பாருங்கள்! எழுத்துகள் எவ்வளவு நேர்த்தியாகவும் தெளிவாகவும் அழகாகவும் இருக்கின்றன. அவை அழகாகத் தெரிகின்றன, அல்லவா? நமது எழுத்துகளையும் இவ்வாறே தெளிவாகவும் அழகாகவும் மாற்றுவதற்கு கையெழுத்துப்பயிற்சி செய்வோம்.

**சயாத்ரி மலைத்தொடரின் ஓரத்தில்**
**நமது கம்பீரமான தேவநகரி!**

இது நான் மனதார விரும்பும் பள்ளி!
தாய் போல் என்னை அரவணைக்கும்!

**அழகான கையெழுத்து என்பது ஒரு கலை பயிற்சியின் மூலம் எவரும் பெற்றுக் கொள்ளக்கூடியது**

## நாம் எழுத்துகளை எழுத பயிற்சி செய்வோம்.




அழகான கையெழுத்திற்கு எழுத்துகளின் உறுப்புகளைப் பயிற்சி செய்வது அவசியம் ஆகும். சில எழுத்து உறுப்புகள் எழுதிக் காட்டப்பட்டுள்ளன. இந்த எழுத்துக் உறுப்புகளை எந்த வரிசையில் எழுத வேண்டும் எப்படி எழுத வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இதனைப் பயிற்சி செய்யுங்கள்.

நன்று! இந்த எழுத்து உறுப்புகளை உங்கள் இரட்டை வரி நோட்டில் பயிற்சி செய்து உங்கள் ஆசிரியரிடம் காட்டுங்கள்.

- பல்வேறு எழுத்து உறுப்புகளையும் எழுத்துகளையும் எழுத பயிற்சி அளிக்கவும்
- எழுத்து உறுப்புகளைச் சரியானத் திசையில் எழுதுவதை உறுதி செய்யவும்.
- மாணவர்களை தங்கள் பயிற்சி ஏட்டில் எழுத்து உறுப்புகளைப் பயிற்சி செய்யுமாறு கூறவும்.

CG - 1
C - 1.2
LO- 03AE5

### எழுத்து உறுப்புகளிலிருந்து எழுத்துகளை நோக்கி

நீங்கள் எழுத்து உறுப்புகளைக் கற்றுக் கொண்டீர்கள். அவற்றைப் பயிற்சி செய்தும் உள்ளீர்கள். இந்த உறுப்புகளில் இருந்து எழுத்துகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதைக் கற்று, பயிற்சி செய்வோம்.

உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் எழுத்துகளை அதிகமாகப்பயிற்சி செய்து ஆசிரியரிடம் காட்டுங்கள்.

### சில மாதிரி எழுத்துகள்:




### எழுத்துகளில் இருந்து சொற்களை நோக்கி:

எழுத்துகளை எப்படி உருவாக்குவது என்று கற்றுக் கொண்டோம். இப்போது சொற்களை அழகானக் கையெழுத்தில் எழுதுவோம்.

<u>பாரதம், புத்தகம், மஹாராஷ்டிரா, புதுமை</u>

இதே முறையில் நீங்கள் ஏதேனும் இருபது சொற்களை அழகான கையெழுத்தில் எழுதுங்கள்.

- எழுத்துகளின் உறுப்புகளிலிருந்து எழுத்துகளை எழுதும் முறையைக் காட்டவும்.
- எழுத்துகளை எழுத பயிற்சி தரவும்.
- பல்வேறு சொற்களையும் வாக்கியங்களையும் குறிப்பேட்டில் நேர்த்தியாக எழுத ஊக்குவிக்கவும்.

CG – 1
C –1.2
LO– 03AE5

### அழகான கையெழுத்தில் வாழ்த்து அட்டை:

கீழே கொடுக்கப்பட்டுள்ள சில மாதிரி அழைப்பிதழ் மற்றும் வாழ்த்து அட்டைகளைக் கவனியுங்கள். நீங்களும் பல்வேறு அழைப்பிதழ்களைச் சேகரிக்க வேண்டும். இதில் உள்ள எழுத்துகளின் அமைப்பை ஆராயுங்கள். உங்கள் விருப்பப்படி வாழ்த்து அட்டை ஒன்றை உருவாக்கி அதில் அழகான கையெழுத்தில் எழுதி ஆசிரியரிடம் காட்டுங்கள்!










### பல்வேறு ஊடகங்கள் மூலம் எழுத்துப் பயிற்சி

எழுத்துகளை எழுதுவதற்குப் பென்சில், மைபேனா, பால்பாயிண்ட் பேனா, ஸகெட்ச் பேனா மற்றும் மெழுகு வண்ணக்கோல்கள் போன்ற பல்வேறு ஊட்கங்களைப் பயன்படுத்தலாம்

**பென்சில் -** அழகான கையெழுத்தே உண்மையான அணிகலன்

**மைபேனா-** அழகான கையெழுத்தே உண்மையான அணிகலன்

**பால்பாயிண்ட் பேனா -** அழகான கையெழுத்தே உண்மையான அணிகலன்

**ஸ்கெட்ச் பேனா -** அழகான கையெழுத்தே உண்மையான அணிகலன்

**மெழுகு வண்ணக்கோல் -** அழகான கையெழுத்தே உண்மையான அணிகலன்

## எனது செயல்

1. செய்தித்தாள்கள் மற்றும் நூல்களிலிருந்து பொன் மொழிகளை சேகரித்து, அவற்றை உங்கள் நோட்டில் அழகான கையெழுத்தில் எழுதுங்கள்.
2. பல்வேறு எழுதும் பொருள்களைப் பயன்படுத்தி உங்கள் சொந்தப் பெயரை நோட்டுப் புத்தகத்தில் எழுதுங்கள்.

**எ-கா:** பென்சில், மை பேனா,பால்பாயிண்ட் பேனா, மெழுகு வண்ணக்கோல்கள், ஸ்கெட்ச் பேனா,

- அழைப்பிதழ் மற்றும் வாழ்த்து அட்டைகளின் எடுத்துக்காட்டுகளைக் காட்டவும்.
- அழைப்பிதழ் மற்றும் வாழ்த்து அட்டைகளைச் சேகரிக்கவும்.
- வாழ்த்து அட்டைகளில் பல்வேறு வகையான எழுத்து வடிவங்களைப் பயன்படுத்த அறிவுறுத்தவும்.
- பல்வேறு எழுதும் பொருள்களைப் பயன்படுத்திக் கடிதம் எழுதுவதை விளக்கவும்.

CG - 1
C -1.2
LO- 03AE5,6

# 3. எனது ஓவியம்! எனது கற்பனை!

நேற்று என்ன நடந்தது என்பதை இன்று நம்மால் நினைவுகூர்ந்து கூற முடியும். நாம் கண்ட ஒரு காட்சி, பொருள் அல்லது அனுபவத்தை விவரிக்க முடியும். அந்தக் காட்சியை நினைவுகூர்ந்து அதன் படத்தை வரையவும் முடியும். இதனை 'நினைவோவியம்' என்கிறோம். நினைவோவியம் என்பது நினைவிலிருந்து வரையப்படும் படம் ஆகும்.

ஒரு நினைவோவியத்தை வரைய, நீங்கள் கோடுகளையும் வடிவங்களையும் நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும். அவற்றை ஏற்கனவே பயிற்சி செய்துள்ளீர்கள். எனவே, மேலும் சிறிது பயிற்சி செய்து ஓர் அழகான நினைவோவியத்தை வரையலாம்.

**காற்றில் வரைதல்:-** உங்கள் விரலால் உங்களுக்குப் பிடித்த மலர் அல்லது பழத்தின் சுற்றுவடிவத்தைக் காற்றில் கைவிரலால் வரையவும். அதே வடிவத்தை ஒரு பென்சிலால் காகிதத்தில் வரையவும்.

**தன்னிச்சையான கோடுகள்:-** ஒரு காகிதத்தில் கையை எடுக்காமல் தொடர்ந்து வட்ட, நெளிவு மற்றும் சாய்வுக் கோடுகளை வரையுங்கள். இந்தக் கோடுகளில் ஒரு முகம் அல்லது மலை போன்ற ஒரு வடிவத்தைக் காண முடிகிறதா? என பாருங்கள்.

**மனிதர்களின் ஓவியம்:** மனித உருவங்கள், மனிதர்களின் இயக்கங்களைக் (உட்காருதல் / நடை / ஓட்டம் / நடனம்) காட்ட, எளிய கோடுகளால் வரையப்பட்ட கோட்டு ஓவியங்களைப்



பார்த்து அதேப்போல் குச்சி மனித உருவங்களை வரையப் பயிற்சி செய்யுங்கள்.

**இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்களின் எளிய கோட்டோவியங்கள்.**

நம்மைச் சுற்றிப் பல்வேறு வகையான பொருள்களையும் கூறுகளையும் காண்கிறோம் இவற்றில் சில இயற்கையானவை, சில மனிதனால் உருவாக்கப்பட்டவை.

**இயற்கையாகக் கிடைக்கும் கூறுகள்: எ-கா.-** மரங்கள், இலைகள்,பூக்கள், பறவைகள், விலங்குகள், மலைகள், நதிகள் போன்றவை.

**மனிதனால் உருவாக்கப்பட்ட கூறுகள்: எ-கா.-** வீடுகள், வண்டிகள், புத்தகங்கள், கணினிகள், பெஞ்சுகள், கோப்பைகள் போன்றவை.

நீங்கள் பார்த்த ஐந்து இயற்கை கூறுகள் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட ஐந்து பொருள்களின் பட்டியலை எழுதுங்கள்.

- குழந்தைகளை அவர்களின் அனுபவத்தில் கண்ட பொருள்களையும் பழங்களையும் கூறச் செய்து, அவற்றின் வடிவங்களை காற்றில் வரைய ஊக்குவிக்கவும்.
- குச்சி மனித உருவங்களை வரைய சில செயல்களைக் கூற, பயிற்சி செய்ய வாய்ப்பை வழங்கவும்.

CG – 1, 2
C –1.2, 2.1
LO– 03AE2,7,15

| இயற்கையான கூறுகள் | மனிதனல் உருவாக்கப்பட்ட கூறுகள் |
| --- | --- |
| ......................... | ......................... |
| ......................... | ......................... |
| ......................... | ......................... |
| ......................... | ......................... |
| ......................... | ......................... |

பட்டியலில் இருந்து ஓர் இயற்கைப் பொருளையும் ஒரு மனிதனால் உருவாக்கப்பட்ட பொருளையும் தேர்ந்தெடுத்து, அவற்றை பென்சிலால் உங்கள் குறிப்பேட்டில் வரையவும்.

நீங்கள் வரைவதற்கு முன் அதன் விவரங்கள் அனைத்தையும் நினைவில் கொள்ளுங்கள். அதன் அளவு, வடிவம், அமைப்பு மற்றும் நிறத்தை நினைவுகூர முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் உங்களால் அந்த பொருளின் அடிப்படை வடிவத்தையும் அதன் நுணுக்கமான விவரங்களையும் வரைய முடியும்.

நீங்கள் கவனித்த இயற்கைக் கூறுகள் அல்லது பொருள்களின் சில படங்களையும் வரைந்து உங்கள் ஆசிரியருக்கும் வகுப்புத் தோழர்களுக்கும் காட்டுங்கள்.

**ஒரு நிகழ்வின் நினைவோவியம்.**

இப்போது உங்கள் நினைவிலிருந்து ஒரு படத்தை வரையலாம். பள்ளிக்கு நீங்கள் சென்ற முதல் நாள் உங்களுக்கு நிச்சயம் நினைவிருக்கும்.

எனவே ‘பள்ளியில் முதல் நாள்’ என்ற கருப்பொருளில் ஒரு நினைவுவோவியத்தை வரையலாம்.

**1. நினைவுகூருவோம் –** பள்ளியின் முதல் நாள் எப்படி இருந்தது. நீங்கள் எப்படிப் பள்ளிக்குச் சென்றீர்கள்? உங்கள் பள்ளிக் கட்டிடம் மற்றும் வகுப்பறை நினைவிருக்கிறதா? பள்ளியில் உங்களை எப்படி வரவேற்றார்கள்? உங்களை வழியனுப்ப யாராவது வந்தார்களா? பள்ளிச் சுற்றுப்புறம் எப்படி இருந்தது? பள்ளிக்குச் செல்லும் வழியை எப்படி உணர்ந்தீர்கள்? இந்த அம்சங்களில் எது உங்களுக்கு மிக தெளிவாக நினைவிருக்கிறது? என்பதைத் தீர்மானியுங்கள். இந்த அம்சம் எந்த வடிவமைப்பைப் போன்றது என்பதை தீர்மானித்து, அதை வரைக.

**2. முக்கிய உருவத்தை வரைதல் –** படத்தின் மையத்தில் உங்களையோ அல்லது உங்கள் நண்பரையோ ஒரு உருவமாக வரையுங்கள். முக்கிய உருவம், காட்சியின் முக்கிய கூறுகளை பென்சிலால் வரைக.

**3. நுணுக்கமான விவரங்கள்:–** படத்தில் உள்ள அனைத்துக் கூறுகளின் அமைப்பும் உறுதி செய்யப்பட்டபின் பள்ளிச்சுவர், பள்ளியின் நுழைவாயில், வளைவு தோரணம், வரவேற்பு பலகை போன்ற நுணுக்கமான விவரங்களை நினைவிலிருந்து வரையவும்.

**4. வண்ணம் தீட்டுதல்:–** நினைவோவியம் முடிந்தவுடன் அதற்கு வண்ணம் தீட்டத் தொடங்குங்கள். ஒரு நினைவோவியத்தில் நீங்கள் கண்டதைப் பிரதிபடுத்துவதே நோக்கம். உங்களுக்கு பிடித்தமான வண்ணத்தை பயன்படுத்திப் படத்திற்கு வண்ணம் தீட்டி ஓவியத்தை முடிக்கவும்.

- **இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட கூறுகளை விவரிக்கும்போது நுணுக்கமான விவரங்களைச் சேர்க்க ஊக்குவிக்கவும்.**
- **வர்ணனைபடி ஓவியத்தில் விவரங்களைக் காட்டுமாறு மாணவர்களை ஊக்குவிக்கவும்.**

CG – 1
C –1.1
LO03AE02

கீழே உள்ள இரண்டு ஓவியங்களை பாருங்கள் மற்றும் அவற்றில் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளுங்கள்.

இவற்றில் ஒன்று **நினைவோவியம்** மற்றொன்று **கற்பனை ஓவியம்.** ஒரு **நினைவோவியத்தில்** ஒரு காட்சியையும் அதன் பொருளையும் பார்த்தபடியே வரைந்து வண்ணம் தீட்டப்படுகிறது. கற்பனை ஓவியம் நினைவோவியத்திலிருந்து வேறுபட்டது. புதுமையான மற்றும் அதிகமான மற்றக் கூறுகள் காணப்படுகின்றன. இவ்வகையானப் ஓவியங்கள் மூலம் ஒருவரின் மனதில் உள்ள தனித்துவமான கற்பனைகளைக் காட்ட முடியும். நமது மனதில் உள்ள வேடிக்கையான எண்ணங்களை வெளிக்கொணரும் படங்கள் கற்பனை ஓவியங்கள் எனப்படும்.





.............................................................. ..............................................................

மேலே உள்ள இரண்டு படங்களில் எது நினைவோவியம்? எது கற்பனை ஓவியம்? என்பதைக் கண்டறிந்து படத்தின்கீழே அதன் பெயரை எழுதுங்கள்.

**ஒரு தனித்துவமானக் கற்பனை ஓவியத்தை வரையலாம்.**

உண்மையில் இல்லாத, கற்பனைச் செய்யக்கூடிய ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்ட படம் “கற்பனை ஓவியம்” எனப்படும். பறவைகளுக்கு இறக்கைகள் இருப்பது போல நமக்கு இல்லை.ஆனால் உங்களுக்கு இறக்கைகள் இருந்தால் என்னவாகும்?

“எனக்கு இறக்கைகள் இருந்திருந்தால்....” என்ற கருப்பொருளில் ஒரு கற்பனை ஓவியத்தை வரையலாம்.

**கீழே காட்டப்பட்டுள்ளபடி ஓவியத்தைப் படிப்படியாக வரையவும்.**

**1. கற்பனை செய்யுங்கள் – எனக்கு இறக்கைகள் இருந்திருந்தால்** அன்றாட வாழ்வில் நான் என்ன செய்வேன்? நான் பள்ளிக்கு எப்படி வந்திருப்பேன்? ஒரு பறவையைப் போல மரத்திற்கோ அல்லது குன்றிற்கோ பறந்து போவேனா?நான் சந்திரனுக்குச் சென்றிருப்பேனோ? நான் இறக்கைகளால் பறந்து என்ன செய்திருப்பேன்? உங்கள் இறக்கை என்ன நிறத்தில் இருந்திருக்கும்? என்று கற்பனை செய்து பாருங்கள். கற்பனை செய்யப்பட்ட காட்சிகளில் உங்களுக்குப் பிடித்தமான ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்.

- மனித ஓவியத்தை வரையும் போது குச்சி ஓவியத்திலிருந்து முழுமையான வடிவத்திற்கு முன்னேற குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- நினைவோவியத்திற்கும் கற்பனை ஓவியத்திற்கும் உள்ள வேறுபாட்டை விளக்கவும்.

CG – 1
C –1.1
LO– 03AE03

**2. முக்கிய உருவம்:-** ஓவியத்தின் மையத்தில் உங்கள் கற்பனை உருவத்தின் ஒரு தோராயமான உருவைப் பென்சிலால் வரையவும். மற்ற பின்னணி விவரங்களைக் கற்பனையிலிருந்து கவனமாக வரையவும்.

**உதாரணமாக:** மலைகள், மேகங்கள், நிலவு மற்றும் வானவில்.

**3. கற்பனையில் எதுவும் சாத்தியமே!:** பூக்களுக்குப் பதிலாக சாக்லேட்களைத் தாங்கும் மரங்களைக் காட்டுங்கள். மழைக்குப் பதிலாக மேகங்களிலிருந்து வண்ண வளையங்கள் விழுவதைக் காட்டுங்கள். நீங்கள் விரும்பும் எதையும் கற்பனைச் செய்யலாம்.

**4. வண்ணம் தீட்டுதல்:** உங்கள் கற்பனை ஓவியத்திற்கு வண்ணம் தீட்ட நீங்கள் விரும்பும் எந்தவொரு தனித்துவமான வண்ணங்களையும் பயன்படுத்தலாம். உங்கள் கற்பனை ஓவியத்தை வகுப்புத் தோழருக்கும் ஆசிரியருக்கும் காட்டி ஓவியத்தின் பின்னணியில் உள்ள கருத்தை விவாதிக்கவும்.

**கவனத்தில் கொள்ளுங்கள்:**

கற்பனை ஓவியத்தில் வண்ணங்களுக்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. உங்களால் உங்கள் சொந்த உலகத்தை உருவாக்க முடியும். எ.கா. நீங்கள் ஊதா நிறப் புல் அல்லது இளஞ்சிவப்பு நிற வானத்தை வரையலாம்.

## எனது செயல்

1. உங்களுக்குப் பிடித்த விலங்கின் ஓவியத்தை வரையுங்கள்.
2. ஏதேனும் ஒரு பண்டிகையின் ஓவியத்தை வரையுங்கள்.
3. "என் கார் வானத்தில் பறக்கிறது" என்ற கருப்பொருளில் கற்பனைப் ஓவியத்தை வரையுங்கள்.
4. "என் கனவில் வரும் தேவதை, என்ற கருப்பொருளில் கற்பனை ஓவியத்தை வரையுங்கள்.

- **மாணவர்களின் கற்பனையைத் தடையின்றி ஓடவிடும் கேள்விகளைக் கேட்டு, கற்பனை ஓவியங்களை வரையவும் வண்ணம் தீட்டவும் ஊக்குவியுங்கள்.**

CG – 1
C –1.1
LO– 03AE03,4

# 4 பொருள்களின் உலகில்

நாம் அன்றாட வாழ்வில் பல பொருள்களைப் பயன்படுத்துகிறோம். வீட்டில், பள்ளியில் மற்றும் உள்ளூர் பகுதிகளில் நாம் சிறிய, பெரிய பொருள்களைப் பார்க்கிறோம், இந்தப் பொருள்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் வடிவம், தடிமன், நீளம், அகலம், நிறம் மற்றும் அமைப்பு ஆகியவற்றை உணர்கிறோம்.

பொருள்களின் ஓவியத்தை வரைவதற்கு அவற்றின் பண்புகளைக் கவனித்துப் புரிந்து கொள்வது அவசியமாகும. பொருளின் வடிவம், அதில் அடங்கியுள்ள வடிவியல் வடிவங்கள், அதைக் குறிக்கத் தேவைப்படும் கோடுகள், அதன் நிறம், அமைப்பு மற்றும் பல.

### வடிவம் மற்றும் பொருள்கள்.

உங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்களைக் கவனித்து, பின்வரும் வடிவங்களின்படி அவற்றை வகைப்படுத்தி பொருள்களின் பெயர்களை எழுதுங்கள்.

| சதுர வடிவப் பொருள்கள் | முக்கோண வடிவப் பொருள்கள் | கோள வடிவப் பொருள்கள் | பல வடிவியல் வடிவங்கள் கொண்ட பொருள்கள் |
|---|---|---|---|
| .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... |

### பொருள்களுக்குள் மறைந்திருக்கும் வடிவியல் வடிவங்களைக் கண்டறிவோம்.

படத்தில் காட்டப்பட்டுள்ள பொருள்களைக் கவனியுங்கள். மறைந்திருக்கும் வடிவியல் வடிவங்களை கண்டுபிடித்து, அவற்றை அருகிலுள்ள கட்டத்தில் வரைக.

பொருள்களைக் கவனித்து அவற்றுள் உள்ள வடிவியல் வடிவங்களைக் கண்டறிய





கற்றுக் கொண்டீர்கள். இப்பொழுது உங்களால் எளிதாகப் பொருள்களின், ஓவியங்களை வரைய முடியும்.

- பொருள்களையும் அவற்றுக்குள் உள்ள வடிவியல் வடிவங்களையும் அடையாளம் காண கேள்விகள் கேட்கவும்.

CG - 1
C - 1.1
LO- 03AE01

## பொருள்களின் ஓவியத்தை வரைவோம்.

அடுத்தடுத்துக் கொடுக்கப்பட்டுள்ள இரு பொருள்களின் ஓவியத்தை வரையுங்கள்.

1. முதலில் பொருள்களைக் கவனியுங்கள்.
2. ஆரம்பத்தில் பொருளுக்குள் மறைந்திருக்கும் வடிவியல் வடிவங்களை அடையாளம் காணுங்கள்.
3. இரண்டு பொருள்களுக்கும் இடையிலான அளவு மற்றும் விகிதாச்சார வேறுபாடுகளைக் கவனியுங்கள்.
4. பொருளின் வெளிப்புறக் கோட்டை வடிவியல் வடிவங்களில் வரையவும்.
5. பொருளின் தன்மைக்கு ஏற்ப கோடுகளைப் பயன்படுத்தி வடிவத்திற்குப் பொருத்தமான வளைவுகளைக் கொடுத்து வரைபடத்தை நிறைவு செய்யவும்.
6. பொருளின் உள்வடிவங்களை வரையவும்.
7. உங்களுக்கு விருப்பமான மெழுகு வண்ணக்கோல்கள் நீர் வண்ணங்கள் போன்றவற்றால் வண்ணம் தீட்டி ஓவியத்தை நிறைவு செய்யவும்.



## அச்சுப்பதித்தல் மூலம் ஓவியத்திற்கு வண்ணம் தீட்டுவோம்.

நீங்கள் பொருள்களை மிக அழகாக வரைந்து வண்ணம் தீட்டியுள்ளீர்கள். ஆனால் அச்சுகளைப் பயன்படுத்தியும் ஒரு பொருளின் வரைபடத்தை பூர்த்தி செய்யமுடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? முன்பு நமது வடிவ வேலைகளுக்கு பல்வேறு அச்சுகளை எப்படி பயன்படுத்தினோம் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? சரி, இப்போது அச்சுகளைப் பயன்படுத்திப் படத்திற்கு வண்ணம் தீட்டுவோம்.

1. வகுப்பறையில் உள்ள ஏதேனும் ஒரு பொருளைக் கோட்டு வரைபடமாக வரையுங்கள் **எ.கா:** ஒரு பை, மதிய உணவு பெட்டி, புத்தகம், பேனா போன்றவை,

2. பொருளின் வண்ணங்களுக்குப் பொருந்தும் வகையில் நீர் வண்ணங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

3. பொருளுக்கு வண்ணம் தீட்ட எந்த அச்சு பயன்படுத்தப் போகிறீர்கள்? என்பதை தீர்மானிக்கவும். **எ.கா:** கைவிரல் அச்சு, வெண்டைக்காய், வெங்காயம், இலை போன்ற வற்றின் அச்சுகள்.

- **அச்சுப்பதித்தல் என்ற கருத்தை விளக்கி அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைச் செயல்முறையில் விளக்கவும்.**

CG – 2,3
C –2.2, 3.1
LO– 03AE11,16

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளைப் பயன்படுத்தி பல்வேறு வண்ணங்களின் சாயல்களைக் கொண்டு அச்சுப் பதித்தலின் மூலம் ஓவியத்தை பூர்த்திச் செய்யவும்.

5. உங்கள் ஓவியத்தை மற்றவர்களுக்குக் காட்டி, உங்கள் அனுபவத்தை விவரிக்கவும்.

**கொலாஜ் மூலம் பொருளின் ஓவியம்.**

நீங்கள் அச்சிடுதல் முறையைப் பயன்படுத்தி ஓவியத்தை அழகாக வரைந்துள்ளீர்கள். இப்போது பொருள் ஓவியத்தை வரைவதற்கு மற்றாரு முறையை தெரிந்து கொள்வோம். அது தான் கொலாஜ் (ஓட்டுச் சித்திரம்). நாம் வடிவமைப்பிலும் கொலாஜ் செய்துள்ளோம்.



கொலாஜ் முறையைப் பயன்படுத்தி ஒரு பொருள் ஓவியத்தை உருவாக்க பின்வரும் படிகளைப் பயன்படுத்தவும்

1. பொருத்தமான அளவு காகிதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளின் வெளிப்புற வடிவத்தை வரையவும்.
2. ஒட்டுப்பட வேலைக்காக வண்ணத்தை மற்றும் பசை போன்றவற்றைச் சேகரிக்கவும். பொருத்தமான வண்ணங்களைத் தேர்ந்தெடுக்கவும்.
3. பொருளின் வண்ணங்களுக்காகக் கையால் கிழிக்கவும்.
4. பொருளில் தெரியும் வண்ணங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட துண்டுகளைக் கோட்டோவியமாக ஒட்டு, கொலாஜ் நுட்பத்தைப் பயன்படுத்தி ஓவியத்தை முழுமையாக்குங்கள்.

## எனது செயல்

- உங்கள் வீட்டிலுள்ள இரண்டு பொருள்களை அருகருகே வைத்து, அவற்றின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒரு பொருள் ஓவியத்தை வரைந்து, பின்னர் அதற்கு வண்ணம் தீட்டுங்கள்.
- உனக்குப் பிடித்த ஒரு பொருளை வரைந்து, அச்சுப் பதித்தல் கலையைப் பயன்படுத்தி, வண்ணம் தீட்டுங்கள்
- ஒரு பொருளின் நிலையான காட்சியை வரைந்து அதை கொலாஜ் நுட்பத்தைப் பயன்படுத்தி நிறைவுசெய்க.

- **“கொலாஜ்” கருத்தை விளக்கவும்: எடுத்துக்காட்டுகளைக் காட்டவும், மேலும் கொலாஜ் நுட்பத்தைப் பயன்படுத்திப் பொருள் ஓவியம் உருவாக்க ஊக்குவிக்கவும்.**

CG - 3
C - 3.1
LO- 03AE18

# 5. முப்பரிமாணக் கலைப் படைப்பு

கீழே உள்ள இரு புகைப்படங்களையும் பாருங்கள். அவற்றிக்கிடையே நீங்கள் காணும் வேறுபாட்டைப் பற்றி கலந்துரையாடுங்கள்.

1. 

2. 

ஒரு ஓவியத்திற்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு. அவை நீளம் மற்றும் அகலம். இரண்டு பரிமாணங்கள் கொண்ட ஒரு கலைப்படைப்பு இரு பரிமாண கலைப்படைப்பு என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் வரைந்த ஓவியம் ஒரு இரு பரிமாணக் கலைப்படைப்பு ஆகும். இங்கு நாம் ஒரு முப்பரிமாணக் கலைப்படைப்பை உருவாக்கப் போகிறோம். முப்பரிமாணம் என்றால் **மூன்று பரிமாணங்கள்:** நீளம், அகலம் மற்றும் பருமன். ஒரு முப்பரிமாணக் கலைப்படைப்பு "சிற்பம்" என்று அழைக்கப்படுகிறது.

**இயற்கைக் கூறுகளிலிருந்து முப்பரிமாணக் கலைப்படைப்பு (சிற்பம்):**

குதிரை சிற்பத்தைப் பார்த்து, அது செய்யப்பட்ட பொருளின் பெயர்களை எழுதுங்கள்.









........................ ........................ ........................ ........................

இவ்வாறு பல்வேறு இயற்கைப் பொருள்களில் இருந்து நாம் முப்பரிமாணப் படைப்புகளை (சிற்பங்களை) உருவாக்கலாம், **எ-கா:** காகிதம், களிமண், மரம். இந்தப் பொருள்கள் 'ஊடகங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஊடகங்களைத் தவிர உங்கள் சுற்றுப்புறத்திலிருந்து மூன்று முப்பரிமாணப் படைப்புகளை (சிற்பங்கள்) உருவாக்கக்கூடிய வேறு பொருள்களைப் பட்டியலிடவும்.

................ ................ ................

................ ................ ................

................ ................ ................

- சுற்றுப்புறத்தில கிடைக்கக்கூடிய ஊடகங்களையும் பொருள்களையும் சேகரிக்கவும்.
- சேகரிக்கப்பட்டப் பொருள்களைப் பயன்படுத்தி முப்பரிமாணக் கலைப்படைப்புகளை உருவாக்கும் முறையை செய்து காட்டவும்.
- சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு முப்பரிமாணப் படைப்புகளை உருவாக்கச் சொல்லவும், செய்முறை வர்ணனை செய்ய ஊக்கப்படுத்தவும்.

CG – 3
C – 3.1
LO– 03AE19

தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள ஊடகங்களில் இருந்து என்னென்ன எந்த முப்பரிமாணக் கலைப்படைப்புகளை உருவாக்கலாம் என்று எழுதுக.

| ஊடகம் | கலைப்படைப்பின் பெயர் |
|---|---|
| ................ | ................ |
| ................ | ................ |
| ................ | ................ |
| ................ | ................ |
| ................ | ................ |

**வண்டி தயார் செய்வோம்.**

உங்கள் ஊள்ளூர் பகுதியில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி உங்களுக்குப்பிடித்தமான ஒருவண்டியின் முப்பரிமாணச் சிற்பத்தை உருவாக்குங்கள்.

**இரண்டு ஊடகங்களைப் பயன்படுத்தி முப்பரிமாணச் சிற்பம்:**

நீங்கள் முப்பரிமாணச் சிற்பத்தை உருவாக்கிய போது ஏற்பட்ட அனுபவத்தை பற்றி வகுப்பில் விவாதிக்கவும். ஒன்றுக்குப் பதிலாக இரண்டு ஊடகங்களைப் பயன்படுத்தி ஒரு முப்பரிமாண அமைப்பை (சிற்பம்) உருவாக்குவோம்.

- உங்கள் பகுதியில் கிடைக்கும் ஏதேனும் இரு பொருள்களைத் தேர்ந்தெடுக்கவும்.
- இந்த இருபொருள்களிலிருந்து ஓர் அழகான வீட்டின் மாதிரியை உருவாக்கவும்.
- நீங்கள் செய்த வீட்டின் மாதிரியை உங்கள் வகுப்பு நண்பர்களுக்கும் ஆசிரியருக்கும் காட்டுங்கள்.

## எனது செயல்

**நினைவில் கொள்ளுங்கள்:**

சுற்றுச்சூழல் மேம்பாட்டு ஊடகங்கள் என்பவை இயற்கையை மாசுபடுத்தாத மற்றும் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத பொருள்களாகும்.

- உள்ளூர் பகுதியில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி ஒரு விலங்கு அல்லது பறவையின் முப்பரிமாணச் சிற்பத்தை உருவாக்கவும்.
- பள்ளியில் குழுவாக சுற்றுச்சூழல் மேம்பாட்டு ஊடகங்கள் மற்றும் கூறுகளைப் பயன்படுத்தி ஒரு பெரிய சிற்பத்தை உருவாக்குங்கள். **எ-கா:** கோட்டை, ரோபோ போன்றவை.

- **கிடைக்கக்கூடிய உள்ளூர் பொருள்கள் மற்றும் வளங்களைச் சேகரிக்கவும்.**
- **சேகரிக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தி ஒரு முப்பரிமாண அமைப்பை உருவாக்கவும்.**
- **உருவாக்கிய முப்பரிமாண கலைப்படைப்பை பற்றி விவரிக்க அவர்களை ஊக்குவிக்கவும்.**

CG – 3
C – 3.1
LO– 03AE19, 20,17


நாடகமேடை

# 6.வாருங்கள் நடிப்போம்

இயற்கையில் பலவகையான விலங்குகளும் பறவைகளும் உள்ளன. ஒவ்வொரு விலங்குக்கும் பறவைக்கும் வெவ்வேறு ஒலி உள்ளது. அவற்றின் உடல் அசைவுகளும் வேறு பட்டவை. சில விலங்குகள், பறவைகளின் ஒலிகளை உங்களால் எழுப்ப முடியுமா?

**வேடிக்கையான விளையாட்டை விளையாடுவோம்.**

கீழ் உள்ள படத்திலுள்ள விலங்குகளின் ஒலிகளை எழுப்புங்கள்.










**யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்?**

இந்த விளையாட்டில் உள்ளூர் பகுதியைச் சார்ந்த விலங்குகள், பறவைகளின் ஒலியை நாம் எழுப்பப் போகிறோம். இஃது எதனுடைய ஒலி என்பதைக் கண்டறிவோம். இதற்காக உங்களுக்குத் தெரிந்த விலங்கு- பறவைகளின் ஒலிகளை எழுப்புங்கள்.

இப்போது வகுப்பிலுள்ள அனைவரும் வட்டமாக அமர வேண்டும். உங்களில் ஒருவர் ஒரு விலங்கு அல்லது பறவை போன்று ஒலி எழுப்ப வேண்டும். அது எந்த விலங்கு அல்லது பறவை என்று ஊகிக்க வேண்டும், சரியான பதிலைக் கூறுபவர் அடுத்து ஒலி எழுப்ப வேண்டும்.

படங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகளின் உடல் அசைவுகளைப் போல நடித்துக் காட்டுவோம்.






- பல்வேறு விலங்குகள் மற்றும் பறவைகளின் படங்களைக் காட்டி அவற்றின் ஒலிகளையும் அசைவுகளையும் போலச் செய்ய வாய்ப்பளியுங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் பங்கேற்றதை உறுதி செய்யுங்கள்.
- ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளையாட்டிலும் பங்கு கொண்டதை உறுதி செய்யுங்கள்.

CG – 4,1
C – 1.1
Lo – 03AE26
03AE27

**பொருள்களின் ஒலிகளுடன் ஒரு வேடிக்கை!**

நாம் வெவ்வேறு பறவைகள், விலங்குகளின் ஒலிகளை உருவாக்கி அடையாளம் கண்டோம். ஒவ்வொரு பொருளுக்கும் கூட அதன் சொந்த ஒலி உண்டு. நீங்கன் கேட்ட பொருள்களிள் ஒலிகளைப் பட்டியலாக உருவாக்குங்கள்.

.................................... .................................... ....................................

.................................... .................................... ....................................

.................................... .................................... ....................................

.................................... .................................... ....................................

## ஒலிகளின் விளையாட்டு

ஒரு மாணவனின் கண்களைத் துணியால் மறைக்கவும். வகுப்பறையில் உள்ள ஏதேனும் ஒரு பொருளைக் கொண்டு ஒலி எழுப்பவும் (எ.கா. கம்பாஸைத் திறப்பது, கதவைத் திறப்பது) கண்கள் மறைக்கப்பட்ட மாணவர் ஒலியைக் கண்டறியும்வரை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இரண்டு முயற்சிகளுக்குப் பிறகும் ஒலியைக் கண்டறிய இயலாவிட்டால். ஏதேனும் விலங்கு அல்லது பறவையின் ஒலியையோ அல்லது அசைவையே செய்யுமாறு கேட்க வேண்டும்.



- வழங்கப்பட்டுள்ள QR குறியீட்டில் உள்ள ஒலியை மாணவர் சரியாக அடையாளம் காண்கிறாரா? என்பதை உறுதிப்படுத்தவும்.
- பல்வேறு பொருள்களின் ஒலிகளை எழுப்ப மாணவர்களைப் பயிற்சி செய்ய வைக்கவும்.
- பல்வேறு பொருள்களின் ஒலிகளை நினைவுகூர்ந்து பட்டியலிடச் சொல்லுங்கள்.
- ஒவ்வொரு மாணவருக்கும் இந்த ஒலி விளையாட்டை விளையாட வாய்ப்பளிக்கவும்.

CG – 1
C– 1.2
Lo– 03AE28

### மனிதர்களைப் போல நடித்துக் காட்டுவோம்.

நமது வீட்டிலும். சுற்றுப்புறங்களிலும் பல்வேறு வகையான மக்கள் உள்ளனர். இந்த மக்களின் ஒலிகளையும் அசைவுகளையும் போல நடித்துப் பார்ப்போம்.

எ.கா.






இதேப்போல் உங்கள் பகுதியிலுள்ள நிபுணர்களையும் பிறரையும் போல மிமிக்ரி செய்ய முயற்சிச் செய்யுங்கள்.

> **நினைவில் கொள்ளுங்கள்**
> பிறரைப்போல செய்யும் திறன் ஒரு கலை ஆகும். இந்தப் போலச் செய்யும் திறனை பிறரைக் கேலிச் செய்ய பயன்படுத்தக் கூடாது.

### நாடகச் சசூழல் பயிற்சி.

நாம்விலங்குகள், பறவைகள் மற்றும் பொருள்களின் ஒலிகளைப் போலச் செய்தோம். நாம் குறிப்பிட்ட நபர்களின் குரல்கள், அசைவுகள் போலவும் செய்தோம். இவற்றைப் பயன்படுத்தி ஒரு குரும்படைப்பை நடித்துக் காட்ட முயற்சிப்போம்.

பின்வரும் சில சூழல்களில் உள்ள உரையாடல்களைப் படித்து அதன் அடிப்படையில் ஒரு சிறிய நாடகத்தை நடிப்போம்.

**சூழல்1. காலை வேளையாகி விட்டது.**

(**கதாபாத்திரங்கள்:** சிட்டுக்குருவி, காகம், சேவல், அம்மா, தூங்கும் சிறுவன்)

இக்கதாபாத்திரங்களை குழுவில் பிரித்து பின்வரும் உரையாடலை நடித்துக் காட்டவும்.

| | | |
|---|---|---|
| சேவல் | : | கொக்கரக்கோ... கொக்கரக்கோ... எழுந்திருங்கள், காலை ஆகிவிட்டது! |
| சிட்டுக்குருவி | : | கீச்.. கீச்.. கீச்.. சூரியன் அண்ணன் மேலே வந்துவிட்டார்! |
| காகம் | : | கா... கா... கா... கிளம்புங்கள், வேலைகளைத் தொடங்குங்கள். |
| அம்மா | : | மகனே, எழுந்திரு, உன் நண்பர்கள் எப்போதோ எழுந்துவிட்டார்கள். நீ எப்போது எழுந்திருக்கப் போகிறாய்? |
| சிறுவன் | : | ஆமாம் அம்மா! நீஙகள் சொல்வது உண்மை தான். இவர்களின் குரல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது. சரி, நானும் எழுந்திருக்கிறேன், பள்ளிக்குத் தயாராவோம். லாலலாலாலா.... |

- பல்வேறு ஒலிகளைப்போல மிமிக்ரி செய்யச் சொல்லுங்கள். அவை யாருக்காகப் பயன்படுத்தப்படலாம் என்றும் கோளுங்கள்.
- குடும்பத்திலும் சுற்றுப்புறத்திலும் உள்ள மக்களின் அசைவுசளை மிமிக்ரி செய்ய வாய்ப்பு வழங்குங்கள்.
- நாடகக் காட்சிகளை வழங்கும்போது, முதலில் பேசும் நடிப்பைச் செய்ய சொல்லி. பின்னர் காட்சியை வழங்கவும்.

CG- 1
C- 1.1
Lo- 03AE 26

என்ன நீங்கள் அதை ரசித்தீர்கள் அல்லவா? கீழே மேலும் சில சூழல்கள் தரப்பட்டு உள்ளன அவற்றை குழுவாக நடித்துக் காட்டவும்.

**சூழல் 2 : சமையலறையில் நடந்த பரபரப்பு**

(கதாபாத்திரங்கள்: குக்கர், குழாய், தட்டு மற்றும் அம்மா)

குழாய் : டப்.. டப்.. டப்.. யாராவது என்னை ஒழுங்காக மூடுங்களேன்ப்பா!

குக்கர் : ஷீஷ் ஷீஷ் ஷீஷ் காய் வெந்துவிட்டது தெரியுமா!

தட்டு : டண்ண்ண்.. அம்மாடியோவ், எனக்கு அடிபட்டுவிட்டது!

அம்மா : ஐயோ கடவுளே, எவ்வளவு பெரிய அசுத்தம்! இந்த தட்டு எப்படி கீழே விழுந்தது? ஆச்சரியமாக இருக்கிறதே! முதலில் குக்கர் கேஸை அணைக்கிறேன். அட, இந்தக் குழாயும் ஏன் திறந்து கிடக்கிறது? இருப்பா, உன்னை மூடுகிறேன், இப்படி சொட்டிக் கொண்டே இருக்காதே. இப்போதுதான் சமையலறை பார்க்க கொஞ்சம் நன்றாக இருக்கிறது. அப்பாடா....

**சூழல் 3. வேண்டாமே அந்த அடித்தல் திருத்தல்**

(கதாபாத்திரங்கள்: பென்சில், அளவுகோல், அழிப்பான், ரஃபிக்)

பென்சில் : கர்.. கர்.. கர்.. ஏய் ரஃபிக், கொஞ்சம் ஒழுங்காக எழுதுப்பா.

ரஃபிக் : என்னாச்சு, வலிக்கிறதா? நான் இப்படித்தான் எழுதுவேன்.

அழிப்பான் : அழி.. அழி.. அழி.. அவன் அப்படித்தான், எதையும் ஒழுங்காக எழுத மாட்டான், சும்மா சும்மா என்னைப் பயன்படுத்திக் கொண்டே இருப்பான்.

பென்சில் : அப்புறம் என்னை எடுத்துக்கொண்டு மீண்டும் எழுதுவான்.

அளவுகோல் : என்னை கோடு போடுவதற்குப் பயன்படுத்துவதை விட, சண்டை போடுவதற்குத்தான் அதிகமாகப் பயன்படுத்துகிறான்.

ரஃபிக் : சரிப்பா! சரி, நான் இனிமேல் அழகாக, நிதானமாக, தெளிவான கையெழுத்தில் எழுதுகிறேன், இப்போது போதுமா நண்பர்களே!

உங்களுடைய பிற பாடநூல்கள் அல்லது கதை நூல்களில் இருந்து இதுபோன்ற சில சிறிய சூழல்களைக் கண்டறிந்து, அவற்றைக் குழுக்களாக நடித்துக் காட்டுங்கள்.

உங்கள் குழுவின் நடிப்பை வழங்கும்போது, மற்ற வகுப்புத் தோழர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொடுத்த ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு மீண்டும் நடித்துக் காட்டுங்கள்.

- பிற பாடநூல்கள் அல்லது கதைநூல்களில் இருந்து சூழல்களைத் தேர்ந்தெடுத்து, அதை நடித்துக் காட்டும் பயிற்சியை அளிக்க வேண்டும். மேலும், மாணவர்கள் தாங்களாகவே சூழல்களை உருவாக்கி நடிப்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.
- நடிப்பைக் கவனித்து ஆலோசனைகளை வழங்க வேண்டும் மற்றும் அதற்கேற்ப மாற்றி மீண்டும் நடிக்கச் செய்ய வேண்டும்.

CG – 1,3
C – 1.1, 3.2
LO03AE26,36

கீழேயுள்ள படங்களைப் பார்த்து பருவகாலங்களின் பெயர்களை கண்டறிந்து எழுதுங்கள்.



..............................



..............................



..............................

கீழே சில உடைகளின் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்களைப் பார்த்து பருவத்திற்கு ஏற்ற சரியான ஆடையுடன் இணைக்க கோடுகள் வரையவும்.

     

மழைக்காலம் | குளிர்காலம் | கோடைகாலம்

வெவ்வேறு பருவக்காலங்களில் பயன்படுத்தப்படும், ஆடை வகைகளைப் பற்றி கலந்துரையாடவும்.

- மூன்று பருவக் காலங்களின் தன்மைகளையும் அப்போது அணியப்படும் ஆடைகளையும் பற்றி கலந்துரையாடச் சொல்லவும்.

CG -4
C - 4.1
LO03AE40

**சூழல் ஒன்று - பருவங்கள் பல**

**சூழல்:** ராஜு பள்ளிக்குத் தயாராகி பள்ளிக்கு நடந்து செல்லுதல். இது ஒரு காட்சியாக இருந்தாலும் வெவ்வேறு பருவ காலங்களில் அது எப்படி மாறும் என்பதை நடித்துக் காட்ட வேண்டும்.



மேற்கண்ட சூழல் ஒன்றுதான் என்றாலும். அது வெவ்வேறு பருவக்காலங்களில் எப்படி நிகழும் என்பதை நடிப்பின்மூலம் காட்டுங்கள்.

## எனது செயல்

1. காலையில் இருந்து இரவு வரை வீட்டில் கேட்கும் ஐந்து வெவ்வேறு ஒலிகளைப் பயிற்சி செய்து, அவற்றை உங்கள் வகுப்புத் தோழர்களுக்கு செய்து காட்டுங்கள். (எ.கா. மிதிவண்டி மணியின் ஒலி, குக்கர் விசில்)

2. கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி ஒரு கருவியை உருவாக்கவும். எ.கா. ஒரு பிளாஸ்டிக் பாட்டிலில் சில கற்கள் அல்லது மணிகளை இடவும். பாட்டிலை

   அசைக்கும்போது ஏற்படும் ஒலியை அனுபவிக்கவும். நீங்கள் ஒரு கிலுகிலுப்பை உருவாக்கியிருக்கிறீர்கள்.

3. பின்வரும் கதாபாத்திரங்களின் நடையை நடித்துக் காட்டுங்கள்.

   அ. கம்பீரமாக நடக்கும் சிங்கம்     ஆ. பயந்த எலி

   இ. விளையாடி சோர்வடைந்த சிறுவன்     ஈ. தவழ்ந்து வரும் குழந்தை.

4. பொருத்தமான உடையை பயன்படுத்தி காட்சியைக் குழுவாக நடித்துக் காட்டுங்கள்.

   **அ. கோடைகாலம் :** சுட்டெரிக்கும் மதிய வேளையில் காய்கறிப் பைகளுடன் சந்தையிலிருந்து வீட்டிற்கு வருதல்.

   **ஆ. மழைகாலம் :** மழையில் பேருந்துக்காக ஒரு மரத்தின்கீழ் காத்திருத்தல்.

   **இ. குளிர்காலம் :** சாலை ஓரத்தில் கண்டெடுத்த ஒரு நாய்க்குட்டியை வீட்டிற்க்கு கொண்டு வருதல்.

- **செயல்களும் முகபாவனைகளும் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்யவும்.**
- **குழந்தைகளை உணர்ச்சிகளையும் சைகைகளையும் வெளிப்படுத்த ஊக்குவிக்கவும். சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவர்களின் முகபாவனை இருக்கிறதா? என்பதை கவனித்து வழிகாட்டவும்.**

CG - 4
C - 4.1
LO03AE40

# 7. நாடகத்திற்குத் தயாராவோம்

ஒரு நாடகத்தைத் தொடங்க முதலில் தேவைப்படுவது ஒரு கதை அல்லது சூழல் ஆகும். அதை நாம் ‘கதை’ என்கிறோம். அடுத்து அதற்குத் தேவையானப் பொருள்களையும் ஆடைகளையும். கருத்தில் கொள்கிறோம். ஒரு காட்சி மனம் கவரும் வகையில் தோற்றமளிக்கவும், வழங்கப்படும்போது உண்மையானதாக உணரப்படவும் நல்ல நடிப்பு அவசியமாகும் ஆகையால் அதற்குத் தேவையானப் பொருங்கள், ஆகைகள் மற்றும் இசையும் முக்கியமானவை. இப்போது பின்வரும் சூழலை வாசிப்போம்.

ஒரு நாள் ராஜுவுக்கு கிரிக்கெட் போட்டி இருந்ததால் அவன் பள்ளியில் இருந்து வீட்டிற்கு ஓடி வந்தான். தன் மதிய உணவுப் பெட்டியையும் பையையும் கீழே வீசினான். அன்று அவனுக்கு போட்டி இருந்தது. வீட்டிலிருந்து மட்டையையும் தொப்பியையும் எடுத்துக்கொண்டு, தன் சகோதரியிடம் “நான் கிளம்புகிறேன்” என்றான். அவனுடைய சகோதரி வெளியே வந்து, நீ இப்போதான் உள்ளே வந்தாய், அதற்குள் எங்கு கிளம்புகிறாய்?” என்று கேட்டாள். அதற்கு ராஜு. “எங்களுக்கு கிரிக்கெட் போட்டி இருக்கிறது. இந்த தண்ணீர் பாட்டிலை தயவுசெய்து நிரப்பிக் கொடு” என்று பதிலளித்தான். அவனுடைய சகோதரி ‘‘பார், மழை பெய்யும் போலிருக்கு. எவ்வளவு இருட்டாய் இருக்கு பாரு, நீ உள்ளே இரு. இல்லாவிட்டால அம்மா திரும்பி வரும்போது கோபித்துக் கொள்வார்’’ என்றாள். அதற்கு ராஜு, ‘‘எங்கள் போட்டி ஏற்கனவே திட்டமிடப்பட்டுவிட்டது. அதன்பிறகுதான் மழை வந்தது. அதற்காக எங்களால் இதை ரத்து செய்ய இயலாது’’ என்று பதிலளித்தான். அவளுக்கு சிரிப்பதா? அல்லது கோபப்படுவதா? என்று தெரியாமல் ‘‘சரி, ஆனால் குறைந்தப்பட்சம் உன் பள்ளிச் சீருடையையாவது கழற்றிவிட்டு இந்த டி-ஷர்ட்டை போடு. இந்தக் குடையையும் எடுத்துக்கொள் மழை பெய்தால் உனக்குத் தேவைப்படும்’’ என்றாள். ‘‘ஏய் அக்கா, பந்து வீசும்பொழுது பேட்டிற்குப் பதிலாக இந்தக் குடையைப் பயன்படுத்திப் பந்தை அடிக்கவா?’’ என்றான். ‘‘பார், நீ கண்டிப்பாகக் குடையை எடுத்துக் கொள்ள வேண்டும்’’ என்றாள் அதே நேரத்தில் மழை பெய்யும் சத்தம் கேட்கத் தொடங்கியது. உடனே அக்கா, ‘‘பார் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. இப்போது மழை நிற்கும் வரை ஏதாவது சாப்பிடு. அப்போதுதான் உனக்கு விளையாட ஆற்றல் கிடைக்கும்’’ என்றாள். இந்தச் சூழலைக் கவனமாக வாசித்திருப்பீர்கள். நாம் இந்தச் சூழலை வழங்குவதற்குமுன் சில முன்கூட்டிய தயாரிப்புகளைச் செய்வோம்

- **சூழல் வழங்கத் தேவையானப் பொருள்களின் பட்டியலை உருவாக்குவோம்.**

................................ ................................ ................................

................................ ................................ ................................

................................ ................................ ................................

இந்தப் பொருள்கள் உங்கள் பகுதியில் கிடைத்தால், அவற்றைச் சேகரித்துப் பயிற்சி செய்யுங்கள்.

- பொருத்தமானக் குரல் ஏற்ற இறக்கத்துடன் சூழலையை வாசிக்கச் செய்யுங்கள்.
- சூழலுக்கு ஏற்ப தேவையான பொருள்களின் பட்டியலைத் தயாரிக்க மாணவர்களுக்கு உதவுங்கள்.

CG- 2
C- 2.1
Lo–03AE29

## மாற்றுப் பொருள்களின் பயன்பாடு:

உங்கள் பள்ளியில் அல்லது உள்ளூர் பகுதியில் சில பொருள்கள் கிடைக்கவில்லை என்றால் அவற்றுக்குப் பதிலாக மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்தவும். எ.கா.



இதன்மூலம் ஒரே ஒரு பொருளை வெவ்வேறு மற்றும் ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்தலாம்.

## நாடகப் பொருள் உருவாக்கம்

சில நேரங்களில் உள்ளூர் பகுதியில் கிடைக்கும் பொருள்களில் ஒரு சிறிய மாற்றத்தைச செய்வதன் மூலம் பயனுள்ள பெருள்களை உருவாக்கலாம்.

### நாற்காலியில் இருந்து அரியாசனம்





- குழந்தைகளுக்குப் பரிச்சயமானப் பொருள்களைக் காட்டி அவற்றை படைப்பாற்றலுடன் எவ்வாறு நாடகத்தில் பயன்படுத்துவது என்று விளக்க வேண்டும். மேலும் அது போன்ற செயல்பாடுகளைப் பயிற்சி செய்யுங்கள்.

CG- 2,3
C- 2.1, 3.1
Lo-03AE30
03AE34

இத்தகைய மாற்று அல்லது ஆயத்தப் பொருள்களைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்ட காட்சியை வழங்கப் பயிற்சி செய்யுங்கள். அதை பிற மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் காட்டுங்கள். ஆசிரியர் மற்றும் நண்பர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் ஒட்டு மொத்த நிகழ்ச்சிக்குத்தேவையான மாற்றங்களைச் செய்தபிறகு மீண்டும் நிகழ்த்துங்கள்.

**ஆடை அலங்காரம்:-**

ஆடை அலங்காரம் என்பது ஒருவர் அணியும் ஆடை. முந்தைய கதையில் ராஜுவும் அவனது அக்காவும் அணிய வேண்டிய ஆடைகளின் பட்டியலை உருவாக்குவோம்.

| ராஜு | அக்கா |
|---|---|
| ............................... | ............................... |
| ............................... | ............................... |
| ............................... | ............................... |
| ............................... | ............................... |
| ............................... | ............................... |

- இந்த ஆடைகளை ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து சேகரிக்கவும்.
- ஆடைகள் அணிந்து பயிற்சி செய்யுங்கள்.
- இந்தப் பயிற்சியை உங்கள் மற்ற நண்பர்களுக்கும் காட்டவும் அவர்கள் ஏதேனும் நல்ல மாற்றங்களைப் பரிந்துரைத்தால், அதைச் சேர்ந்து மீண்டும் வழங்குங்கள்.

**வாருங்கள் விளையாடுவோம்: கைத்தட்டல் மழை.**

ஒருவரைக் குழுவிற்கு முன்னால் நிற்கச் சொல்லி அவரது கைவிரல்களைக் காட்டச் சொல்லுங்கள்.

மற்றக் குழந்தைகள் கைத்தட்டலைத் தொடங்கவும். முதலில் ஒரு விரலால், பின்னர் இரண்டு விரல்களால், படிப்படியாக அதிகரித்து இறுதியில் இரு கைகளாலும் தட்டுவார்கள். மழை சத்தம் அதிகரிப்பதுபோல கைத்தட்டலின் சத்தம் அதிகரிக்கும்.

அடுத்து தலைகீழாக ஒவ்வொரு முறையும் ஒரு விரலைக்குறைத்து இறுதியில் ஒற்றை விரல் தட்டலுக்குத் திரும்புங்கள். இது மழை சற்று குறைந்து, பின் நின்று விட்டது போன்ற ஒலியை ஏற்படுத்தும். விளையாட்டில் சுவாரஸ்யத்தைக் கூட்ட விரல்களின் எண்ணிக்கையை அறிவுறுத்தலின் படி மாற்றுங்கள்.

**இதில் ராஜு மற்றும் அக்காவின் காட்சியின்போது மழையின் ஒலியை உருவாக்க இந்த விளையாட்டைப் பயன்படுத்தவும்.**

- குழந்தைகள் தங்கள் கற்பனையைப் பயன்படுத்த பல்வேறு காட்சிகளை நடிக்கச் செய்யுங்கள். கதையை படித்துக்காட்டச் செய்யுங்கள். தேவையான ஆடை களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு வழங்குங்கள்.
- மழை கைத்தட்டலுக்கு அதிக அல்லது குறைவான விரல்களைக் காட்டச் செய்து, மழையின் சத்தத்தை அனுபவிக்கச் சொல்லுங்கள்.

CG- 2
C- 2.1
Lo-03AE32
03AE33
03AE36
03AE37

## எனது செயல்

1. சிறிது யோசித்து இந்தக் கணிதப் பெட்டியை நாடகத்தில் ஒரு துணைப் பொருளாக எங்கெங்கெல்லாம் பன்படுத்தலாம் என்று சொல்லுங்கள்.



2. உங்களுடைய வகுப்புப் பாடநூல், பிற விஷயப் பாடநூல் அல்லது கதைநூலிலிருந்து ஒரு காட்சியைத் தேர்ந்தெடுக்கவும். அக்காட்சியை வழங்க பின்வரும் கருத்துகளை கவனத்தில் கொள்ளுங்கள்

- கதாபாத்திரங்களின் தேர்வு
- நாடகப் பொருள்களின் தேர்வு
- ஆடைகளின் தேர்வு
- வகுப்பறை நாடக அரங்கின் வடிவமைப்பு
- வழங்கும் விதம்

- **குழந்தைகளின் பங்கேற்பு மற்றும் கற்பனையை அனுமதிக்கவும்.**
- **காட்சிகளை முன்வைக்கும் போது பொருத்தமான இடங்களில் வழிகாட்டுங்கள்.**

CG- 2
C- 2.1
Lo-03AE32
03AE33
03AE36
03AE37

# 8. வாருங்கள் நாடக மேடைக்குச் செல்வோம்

இதுவரை நீங்கள் நாடகத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முடித்துவிட்டீர்கள். இனி அதை எங்கே நிகழ்த்துவது என்று யோசிக்கலாம். பின்வரும் காட்சியில் ஒரு வகுப்பில் என்ன நடந்தது என்று பார்ப்போம்.

**பிராச்சி** : ஐயா! நாடகத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராகி விட்டன. ஆனால் அதை எங்கே நிகழ்த்துவது?

**ஆசிரியர்** : ஏன், என்ன ஆயிற்று?

**சபானா** : பள்ளி கலையரங்கில் பெற்றோர் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மைதானத்தில் உள்ள மேடை வெயிலின் காரணமாக சூடாக உள்ளது. கால்கள் சுடும்.

**ஆசிரியர்** : ஒ.. அப்படியானால் நம் வகுப்பறையிலேயே நாடகத்தை அரங்கேற்றுவோம். ஏனென்றால் நம் மாணவ நண்பர்கள் தான் பார்வையாளர்கள். அவர்கள் வகுப்பறையிலேயே வசதியாக அமர்வார்கள்.

**ராஜு** : ஐயா! அப்படியானால் நாம் கரும்பலகைக்கு முன்னால் நின்றுதானே நாடகத்தை நடிக்கப்போகிறோம்?

**ஆசிரியர்** : ஆமாம்...

**ராஜீ** : அப்படியென்றால் கரும் பலகையில் நாடகத்திற்கு ஏற்ற ஒரு ஓவியத்தை வரையலாமா..?

**ஆசிரியர்** : வரையலாம், ஆனால் அந்த மேசையை ஒரு பக்கமாக நகர்த்துங்கள்.அப்போதுதான். நாாடகம் நடத்த போதுமான இடம் கிடைக்கும்.

**பிராச்சி** : ஐயா இந்த இருக்கைகளைக் கொஞ்சம் பின்னால் நகர்த்தலாமா? அப்படிச் செய்தால் இசை கலைஞர்கள் இங்கே அமரலாம்.

**சபானா** : ஆமாம் அவர்களுக்கு தங்களுடைய பொருள்களை வைப்பதற்கு இடம் கிடைக்கும் அல்லவா?

**ஆசிரியர்** : சரி, ஆனால், நாடகத்தைப் பார்க்கும் மாணவர்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்து முழு நிகழ்ச்சியையும் பார்க்கும் வண்ணம் இருக்கைகள் அமைக்கப்பட வேண்டும்.

**ஜான்** : நாம் நாடகத்தித்குத் தேவையானப் பொருள்களை முன்னால் வைத்தால் பார்வையாளர்கள் பார்த்து விடுவார்கள் அல்லவா...?

**ராஜு** : ஐயா, அதை எப்படி மறைப்பது? நாடகம் தொடங்குவதற்கு முன் அதை யாரும் பார்க்காமல் இருக்க வேண்டுமே....

**அக்ஷரா** : ஐயா, நாடகத்தில் எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**ஆசிரியர்** : அட.. அக்ஷரா, நாடகத்தில் உங்களைப் போல இன்னும் சில மாணவர்கள் பங்கேற்கப் போகிறார்கள், நீங்களும் அவர்களுடன் சேர்ந்து பங்கெடுங்கள் .

**அக்ஷரா** : ஆனால் எங்களின் பங்கு என்ன? நாடகம் இன்னும் அரைமணி நேரத்தில் தொடங்கப் போகிறதே. ஆனால் எங்களின் ஒத்திகை?

- கொடுக்கப்பட்ட உரையாடல்களைப் படித்து, அதில் ஒவ்வொரு காதாபாத்திரங்களையும் உரையாடலையும் மாணவர்களுக்கு கூறி பிரித்துக் கொடுத்து நடிக்க வைக்க வேண்டும்.

CG - 3
C- 3.2
Lo- 03AE35
03AE38

ஆசிரியர் : உங்களுடைய பங்கு திரையில் இருக்கிறது.

அக்ஷரா : என்ன! திரையா?

ஆசிரியர் : ஆம், குழந்தைகளின் நாடகத்திற்கான திரையும் குழந்தைகளால் தான் உருவாக்கப்படும். நமது வகுப்பறையை ஒரு வகுப்பறைநாடக அரங்கமாக மாற போகிறது.

அனைவரும் : என்னது, வகுப்பறை நாடக அரங்கமா?

ஆசிரியர் : ஆம். இதுதான் 'வகுப்பறை நாடக அரங்கம்' என்று அழைக்கப்படுகிறது.

சபானா : ஆனால் ஐயா, நாடகம் தொடங்குவதற்கு முன் நம்முடையப் பொருள்களையும் அலங்கரிக்கப்பட்ட கரும்பலகையையும் யாரும் பார்க்கக் கூடாது இல்லையா? அப்படி இருக்தால்தானே அது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆசிரியர் : அதனால்தான் நாம் குழந்தைகளின் உடலைக் கொணடு ஒரு திரையை உருவாக்க வேண்டும். பார்வையாளர்களுக்குப் பின்னால் எதுவும் தெரியாதபடி குழந்தைகள் மேடையின் முன்புறத்திற்கு அருகில் நிற்க வேண்டும். பிறகு நாடகம் தொடங்குவதற்கு முன் இந்தக்குழந்தைகள் மெதுவாக இடமும் வலமும் நகர்வார்கள். இப்போது காட்சிப்பகுதி தெரியும். நாடகமும் தொடங்கிவிடும்.

## மனித உடல்களால் ஆன திரை



மூடிய திரை



திறந்த திரை

- விளக்கக் காட்சி அளிக்கும்போது பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு வெவ்வேறு குழுக்களை உருவாக்கவும்.
- ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கிடைப்பதை உறுதிசெய்யவும்.

CG – 3
C– 3.2
Lo– 03AE35
03AE38

## பின்னணி இசையுடன்.

பின்னணி இசையுடன் ஒரு காட்சி வழங்கும்போது, அது பார்வையாளர்களுக்கு மிகவும் சுவாரசியமாக இருக்கும். இந்த இசையை நமது சுற்றுப்புறங்களில் காணப்படும் பல பொருள்களிலிருந்தும் உருவாக்கலாம்.

ஒரு நாடகத்திற்குத் தேவையான ஒலிகளைப் பல பொருள்களில் இருந்து உருவாக்குவதன் மூலம் இசையை உருவாக்கலாம்.



**இசையும் நமக்குள் மறைந்திருக்கிறது**

- உங்கள் வாயால் வெவ்வேறு ஒலிகளை எழுப்ப முடியும்
- கைகளாலும் கால்களைத் தட்டியும் ஒலிகளை உருவாக்கலாம்



பின்னணி இசையுடன் நிகழ்ச்சிக்குத் துணையாக வரும் மாணவர்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**
இந்திய நடனத்தின் அடித்தளத்தை பரத முனிவர் அமைத்தார். மராத்தி நாடக வரலாற்றில் சங்கீத் சாகுந்தலம் என்பதுதான் முதல் இசைநாடகம் என்று கருதப்படுகிறது.

## வாருங்கள் செய்து பார்ப்போம்.

வகுப்பறையில் மாணவர்களைக் கொண்டு சில குழுக்களை உருவாக்குவோம்.

| | | |
|---|---|---|
| முதல் குழு | : | நமது பாடநூலிலிருந்து ஒரு கவிதை காட்சியை சைகைகள் மூலம் வழங்குதல் |
| இரண்டாவது குழு | : | நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஒரு தாளக் கருவியைக் கொண்டு அல்லது கிடைக்கக்கூடிய ஏதேனும் பொருளைக் கொண்டு ஒரு தாளத்தை உருவாக்குதல் |

இசை வழங்குவதற்காக –
- சுற்றுச்சூழலில் கிடைக்கும் பொருள்களைச் சேகரிக்கவும்
- சேகரிக்கப்பட்ட பொருளிலிருந்து இசையை உருவாக்க ஒரு வாய்ப்பை வழங்கவும்.

CG -3
C-3.2
Lo- 03AE37

### ஒளியை பயன்படுத்துவோம்.

நாம் இப்போது காணவிருக்கும் காட்சி எந்த நேரத்தைச் சேர்ந்தது என்று பார்ப்போம். அதாவது காலை, மதியம் அல்லது இரவு என்று அந்த வகையில் வகுப்பறைஅரங்கில் பொருத்தமான ஒளியை எப்படி அமைக்க முடியும் என்று பார்ப்போம். இப்பொழுது மெதுவாக பொழுது விடிவதைக் காட்டுவோம்

நம் அனைவருக்கும் ஒளியைத்  தருகிறது. நாம் ஒளி அமைப்பில் இதனைப் பயன்படுத்தினால் நமக்கு எவ்வளவு மகிம்ச்சியாக இருக்கும். வகுப்பறையில் இருக்கும்  மற்றும்  ஆகியவற்வை அடைக்குபோது இருட்டாகி  ஆகவிடும். இப்பொழுது விடியற்காலை விடியும் பொழுதைக் காட்ட வேண்டுமெனில்.  மற்றும்  மெதுமெதுவாக திறந்து விடவும். ஆனால் அவற்றை முழுமையாகத் திறக்காதீர்கள். ஏனென்றால் காலையில் ஒளி அவ்வளவு அதிகமாக இருக்காது. பிறகு அது நண்பகல் அதிகமாக ஒளியைக் கொடுக்கும்.  வரும்போதும் ஒளி குறைவாக இருக்கும், சரிதானே! வகுப்பறையில் உள்ள ஒரு  அல்லது  ஆகியவற்றை காலை, மதியம் மற்றும் இரவைக் காட்டப் பயன்படுத்தும்போது  ஆன் செய்து ஆஃப் செய்வதன் மூலம் நீங்கள் அதைக் காட்டலாம்.

இப்போது இவை அனைத்தும் உங்கள் நாடகத்திற்கு மெருகூட்டலாக அமையும். அதிலுள்ள உணர்ச்சிகள் உண்மையாகவே சிறப்புடன் விளங்கும். ஒளி அமைப்பின் மகிழ்ச்சியை நீங்கள் அனுபவிப்பீர்கள்.

- ஒத்திகையின்போது குழந்தைகள் இயற்கை ஒளியை பயன்படுத்தும் வகையில் கதவு மற்றும் சன்னல்களைத் திறந்து மூடுவதைப் பயிற்சி செய்யுங்கள். அது பொருத்தமான தருணத்தில் சரியான சூழலை உருவாக்க அவர்களுக்கு உதவும்.

CG -4
C - 4.1
LO03AE39

## வேடமணிவோம்!

ஒரு நிகழ்வை உருவாக்குவதற்கு முன்பு நாம் பல்வேறு விதமாக நம்மை தயாரித்துக் கொள்கிறோம் ஒத்திகை செய்கிறோம். பின்னர் நாம் நடிக்கப்போகும் கதாபாத்திரத் திற்கான ஆடையை அணிகிறோம். உங்கள் நண்பர்கள் இதைப் பார்க்கும்போது, நிஜமாக உணரப்படும். இருப்பினும் உடையைத் தேர்ந்தெடுப்பதற்குமுன் குழுவில் விவாதிக்கவும், அது உங்களுக்குப் பொருந்துகிறதா? என்று பார்த்து பின்னர் ஒத்திகையை செய்யுங்கள். நீங்கள் வேடமணிந்து ஒத்திகை பார்க்கும்போது அதில் நடப்பது, உட்காருவது மற்றும் நிற்பதற்குப் பழகி விடுவீர்கள். உங்கள் நிகழ்ச்சியின் போது அது உங்கள் கவனத்தைக் தொடர்ந்து சிதறடிக்காது. உங்கள் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இருக்கும்.



• நிகழ்ச்சியில் வரும் கதாபாத்திரங்களின் வேடமணிந்து பயிற்சி செய்ய வைக்க வேண்டும்.

CG –2, 3
C–3.1, 3.2
Lo– 03AE35

**வாருங்கள் பயிற்சி செய்வோம்**

நாம் தேர்ந்தெடுத்தக் காட்சி அல்லது நாடகத்தின் அரங்கேற்றத்தை நமது வகுப்பறையில் ஒத்திகைப் பார்ப்போம். இதைச் செய்ய இருக்கை அமைப்பை மாற்றி குழந்தைகள் நடிப்பதற்கு இடம் உருவாக்குவோம்.

- ஒத்திகையின்போது பொருத்தமான ஒளி அமைப்பைப் பயன்படுத்துவோம். ஒத்திகையின்போது நிகழ்ச்சிக்குத் தேவையான பொருள்களைப் பயன்படுத்த தொடங்குங்கள்.
- தேவையான பொருள்கள் கிடைக்காதபோது நம்மிடம் உள்ள பொருள்களைக் கொண்டு இசை அமைக்கப் பயன்படுத்துவோம்.
- நாடகத்தில் வரும் பாத்திரங்களுக்கான உடைகளைத் தீர்மானித்து அவற்றை அணிந்து ஒத்திகைப் பார்க்கவும்.
- நண்பர்களின் உதவியுடன் ஒரு திரையை உருவாக்கி ஒத்திகையைத் தொடங்குவோம்.
- ஒரு சிறந்த நிகழ்ச்சிக்கு தயாராவோம்.

**மேடையில் வழங்குதல்:**

போதுமான பயிற்சிக்குப் பிறகு வகுப்பறை நாடகத்தை வடிவமைத்து ஆடை, அரங்கப் பொருள்கள், இசை மற்றும் ஒளி போன்ற தொழில்நுட்பக் கூறுகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி ஒரு சிறந்த நிகழ்ச்சியை நடத்துங்கள். நிகழ்ச்சிக்குப் பிறகு மற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் வழங்கும் கருத்துகளைக் கருத்தில் கொண்டு மீண்டும் ஒரு முறை நாடகத்தை நடித்துக் காட்டுங்கள்.

## எனது செயல்

1. பாடநூல் அல்லது கதைநூலிலிருந்து ஒரு காட்சியைத் தேர்ந்தெடுத்து நிகழ்ச்சியாக வழங்கவும்

- கதா பாத்திரத் தேர்வு
- தேவைப்படும் பொருள்கள்
- ஒலி/இசை
- ஒளி அமைப்பு
- ஆடையலங்காரம்

இந்தத் தொழில்நுட்பக் கூறுகள் அனைத்தையும் திட்டமிட்டுப் பயன்படுத்தி குழுவாக மேடையில் நடித்துக் காட்டுங்கள்.

- ஒரு நிகழ்ச்சி முன்பே ஒத்திகைப் பார்க்கப்பட்டதாகவோ அல்லது பாடநூல் கதைநூல் ஆகியவற்றிலிருந்து வயதுக்கேற்ற ஏதேனும் ஒரு காட்சியையோ அல்லது குறும் நாடகத்தையோ தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பை வழங்கவும்.

CG –2, 3
C–3.1, 3.2
Lo– 03AE33
03AE35
03AE38


தா
தீம்
தீம்
தா
இசை



# 9. அனைவரும் சேர்ந்து பாடுவோம்!



நாம் அனைவரும் பாடல் பாடுவதையும் கேட்பதையும் விரும்புகிறோம், இல்லையா! ஆனால் உங்களுக்குத் தெரியுமா?நாம் அனைவரும் சேர்ந்து பாடும்போது, அந்தப் பாடலின் மகிழ்ச்சி முற்றிலும் வித்தியாசமாக இருக்கும்.

இன்று இதுபோன்ற சில அருமையான பாடல்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறோம். எனவே இந்த அழகான இசைப் பயணத்தைத் தொடங்கி பாடுவோம்.

**மாநிலப் பாடல்.**

மாநிலப் பாடல் தேசிய ஒற்றுமை உணர்வை வளர்ப்பதற்கும் மகாராஷ்டிராவின் சிறப்புகளைப் போற்றுவதற்கும் பாடப்படுகிறது. இந்தப் பாடல் மகாராஷ்டிராவின் புகழ்பெற்ற வரலாற்றை விவரிக்கிறது. மாநிலப்பாடலுக்கு மரியாதை செலுத்தும் விதமாக கவனத்துடன் நின்று பாடுவது மரபு ஆகும்

மாநிலப் பாடல்

*ஜெய ஜெய மகாராஷ்டிர மாஜா,*
*கர்ஜா மகாராஷ்டிர மாஜா.*
*ஜெய ஜெய மகாராஷ்டிர மாஜா,*
*கர்ஜா மகாராஷ்டிர மாஜா.*
*பிதீ ந ஆமா துஜி முளீ ஹீ,*
*கட்கடநார்யா நபா.*
*அஸ்மானாச்யா சுல்தாநீலா,*
*ஜவாப் தேத்தீ ஜிபா.*
*சயாத்ரீச்சா சிம்ஹ கர்ஜதோ,*
*ஷிவ் சம்பூ ராஜா.*
*தரி தரிதூன் நாத் குஞ்சளா,*
*மகாராஷ்டிர மாஜா.*
*ஜெய ஜெய மகாராஷ்டிர மாஜா,*
*கர்ஜா மகாராஷ்டிர மாஜா. ||1||*



*காழ்யாச் சாத்தீவரி கோரலி,*
*அபிமானாச்சி லேணி.*
*போளாதீ மன்கடே கேள்தி, கேள் ஜீவகேணி.*
*தாரித்ரியாச்யா உனாத் சிஜளா,*
*நிடழாச்யா காமானே பிஜ்ளா.*
*தேஷ்-கௌரவாசாட்டி ஜிஜ்ளா*
*தில்லிசே ஹீ தக்த ராகிதோ,*
*மகாராஷ்டிர மாஜா*
*ஜெய ஜெய மகாராஷ்டிர மாஜா, கர்ஜா மகாராஷ்டிர மாஜா.*
*ஜெய ஜெய மகாராஷ்டிர மாஜா,*

பாடல்- ராஜா படே

- தாளத்துடனும் இசையுடனும் மாநிலப் பாடலைப் பயிற்சி செய்யுங்கள்.

CG - 1
C -1.1
LO 03AE43/57

**ஸ்லோகம்:** நமது நாளை மகிழ்வுடன் தொடங்க நாம் இறைவன் முன் ஒரு ஸ்லோகத்தைச் சொல்கிறோம். இது நமக்கு நன்மையைத் தருகிறது. பின்வரும் ஸ்லோகம் நாம் உணவு உண்பதற்கு முன் கூறப்படுகிறது.

*வதனீ கவள கேதா நாம்*
*க்யா மாத்ருபூச்சே*
*சகஜ் ஸ்மரண் ஹோதே ஆபுல்யா*
*பாந்த்வாஞ்சே*
*க்ருஷிவள் க்ருஷிகர்மீ*
*ராபத்தீ-திவஸ்-ராத்ர,*
*ஸ்ரமிக் ச்ரம் கரோநீ வஸ்தூ*
*யா நிர்மிர்தாத*
*ஸ்மரண் கரூன் த்யாஞ்சே*
*அன்ன சேவா குஷால்*
*உதரபரண் ஆஹே சித்த*
*ஹோன்யா விஷால்*



**வாசியுங்கள் மற்றும் சொல்லுங்கள்.**

நமது நாளையும் படிப்பையும் பிரார்த்தனையுடன் தொடங்குவதால் நமது மனம் மகிழ்ச்சியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்கும். இப்போது நாம் அனைவரும் சேர்ந்து பின்வரும் பிரார்த்தனையைப் பாடுவோம்.

**பிரார்த்தனை**

*ப்ரணாம் ப்ரபுஜீ துலா ஆமுச்சா*
*ப்ரணாம் ப்ரபுஜீ துலா.*
*சூர்ய சந்திர ஜனூ திவே விஜேசே,*
*லடகதீ தாரே கசே மஜேசே*
*வீஜ் நபாதுனீ துலா மிலே கா? ।।1।।*

*பாவுஸ் படுனீ ஷேதே பிக தீ,*
*மாதீமதுனீ நிகதீ மோதீ.*
*சம்பாலிசீ முலா முலான்னா, ।।2।।*

*சக்தீ, புத்தீ ஆம்ஹா த்யாவீ.*
*தேஷ் ஆமுச்சா சுகாத் டேவி,*
*ஹேச் மாங்னே துலா ஆமுசே.।।3।।*



- கிடைக்கும் கருவிகளின் உதவியுடன் பாடல்களையும் பிரார்த்தனைகளையும் தாள லயத்துடன் பயிற்சி செய்ய வேண்டும்.

CG - 1
C -1.1
LO 03AE44

பள்ளி எப்போதும் ஒரு பிரார்த்தனையுடன் தொடங்குகிறது. இதில் நாம் தேசிய கீதம், மாநில கீதம், ஸ்லோகங்கள், பிரார்த்தனைகள் மற்றும் குழுப்பாடல்களை ஒன்றாகப் பாடுகிறோம். இது மனதை ஒருமுகப்படுத்த உதவுகிறது, மகிழ்ச்சியான உணர்வைத் தருகிறது.

நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பின்வரும் பிரார்த்தனையைக் கேட்டுப் பாடுவோம்.

## பிராத்தனை பாடல்



*சராசராஞ்ச்யா சர்வ ஷக்தீனநோ*
*ஹீ ஆமுசீ பிராத்தனா!*
*கரா அம்ஹார்லா நிர்பயநிர்மல்*
*உஜலூ த்யா ஜீவனா*

*வித்யேவர் நிஷ்டா டேவூ யா*
*உத்யோ காசீ காஸ் தரு யா*
*சாஹஸ் ஷிக்வா சம்யம ஷிக்வா*
*கடவூ த்யா ஜீவனா*

*நகோ கதீ தோ கர்வ யஷாசா*
*நகோ கதீ ஆலஸ் காமாசா*
*த்வேஷ் குணாசா நகோ கதீஹி*
*புளவூ சஹஜீவனா*

*ரக்ஷண் கர்ணே யா ச்ருஷ்டீசே*
*வாட்டோ அம்ஹா அதிமொலாசே*
*மமதேசி ஆணிக சமதேசி*
*த்யா ஆம்ஹாம் ப்ரேரணா*

**நினைவில் கொள்க:**
பிரார்த்தனையை உரக்க கூற கூடாது. மாறாக, இதயப்பூர்வமாக மென்மையான குரலில் பாட வேண்டும்.

- **பாடலை சரியாக உச்சரிக்கவும், ஸ்வரம் மற்றும் தாளத்தோடு கூறவும் வழி காட்டுங்கள்.**
- **பிரார்த்தனையை ராகத்துடன் பாடச் செய்து அதைப் பற்றி கலந்துரையாட வேண்டும்.**

CG - 1
C -1.2
lo03AE45/46/57

## குழந்தைப் பாடல்:-

நீங்கள் எப்போதாவது குழந்தைப் பாடலைப் பாடி நடனமாடி இருக்கிறீர்களா? எந்தக் குழந்தைப் பாடலுக்கு நடனமாட உங்களுக்கு பிடிக்கும். சரி அப்படியானால், இயற்கை வண்ணங்களுடன் இணைவோம். இந்தப் பாடலுடன் பறவைகளின் கீச்சொலியையும் நீரின் சலசலப்பையும் சேர்த்துக் கொள்வோம்.

மளா ன கள்தே சா ரே க ம
கான்யாசே சங்கீத்
மீ காதோ பட்பட்கீத்
பட்பட் பட்பட் பட்பட் கீத் (பல்லவி)

ஜம்வூன் சாரி வேடி போரம்
டப்டப் பாடூன் கைர்யா-போர்
குஷால் பஸ்தோ ஃபாந்திவரதி
நாஹி குணாலா பீத்॥1॥

ஓடா காயீ ஜுல்ஜுல் கானி
கோகில் காயீ அம்ருதவாணி
ஆஃமி காதோ த்யாச்யாசங்கே
தீஹி ஹோதி தீட் ॥2॥

கதீ பாக்கரே ஹோவூன் பிர்தோ
கதீ ஆயீச்யா குஷித் சிர்தோ
பால்பணிசா காள் சுக்காசா
ஹீச் ஆமுசி ரீத் ॥3॥

- கவி. ஜக்தீஷ் கேபுட்கர்



- கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி பாடல்களைத் தாளத்துடனும் உணர்வுடனும் பாடி நடிக்க ஊக்குவிக்கவும்.
- பாடல்களைப் பாடுவதில் அனைவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

CG - 2
C - 2.1
LO03AE
47/57

## குழந்தைப் பாடல்:-



டப் டப் டப் தேம்ப வாஜதி,
கானே காதோ வாரா
விஸரா ஆதா பாட்டீ புஸ்தக்
மஜேத் ஜேளா சாரா
பாவுஸ் ஆளா ரே பாவுஸ் ஆளா ॥பல்லவி॥
நே பாவுஸ் ஆளா
கராகராவர் கௌலாராம்வர் ஆலே
ஜிம்ஜிம் பாணி
குண்குண்தி ஜாடான்சி பானே
ஹிரவிஹிரவி காணி
அவதிபவதி பிஜீன் மாதி
சுகந்த் பரலா சாரா ॥1॥
கால்யாபோர் டகான்னா ஜாலி
கோஸளண்யாசி காயீ
இவ்ளே இவ்ளே பங்க் புள்வுனி
காதே ஹி சிவூ தாயீ
ஆனந்தே ஹம்பரதி காயீசமோர்
விஸ்ருன் சாரா ॥2॥

பாடல் - **மங்கேஷ் பாட்காவகர்.**

- கைத்தட்டலுக்கு ஏற்ப குழந்தைப் பாடலைப் பாடுவதைப் பயிற்சி செய்யுங்கள்.
- இந்தக் குழந்தைப் பாடலைப் பாடும்போது எப்படி உணர்ந்தீர்கள் என்பதை வகுப்புத் தோழர்களுடன் குழுவாக விவாதிக்கவும்.
- பாடலில் உங்களுக்குப் பிடித்த வரிகளைப் பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.



- **கை தட்டலுடன் தாளத்திற்கு ஏற்ப குழந்தைப் பாடலைப் பாடவும்.**
- **குழந்தைப் பாடலைப் பாடும்போது என்ன உணர்கிறீர்கள். உங்களுக்குப் பிடித்த வரிகள் குறித்து கலந்துரையாடுங்கள்.**

CG - 1/2
C -1.1/2.2
LO 03AE
44/45/ 57

## அபிநயப் பாடல்.

பாட்டின் வரிகளின் அர்த்ததைக் கருத்தில் கொண்டு அதைப் பாடுவதற்குப் பதிலாக நடிப்பை வெளிப்படுத்துவோம்.

சோட்டி சோட்டி ஆமி பாலகே,
மௌஜ் நி கம்மத் கரு.
ஜாடே வேளி புலே பாக்கரே,
யாஞ்சி மைத்ரி தரு.

கரூ நக்ளா ஆவாஜ் காடு,
பக்ஷி அன் ப்ராண்யாஞ்சே.
காஹூ கானே கேல் ஹன்டூ
மைதானாவர்சே !

பாகடதானா ஆனந்தானே,
அப்யாஸா சாவரூ.
சோட்டி சோட்டி ஆமி பாலகே,
மௌஜ் நி கம்மத் கரு.

- கவி. ராஜேந்திர அத்ரே.



**நினைவில் கொள்க:**
குழந்தைப் பாடல்கள் குழந்தைகளின் விருப்பங்கள் இயற்கை, விலங்குகள், போன்றவற்றை விவரிக்கின்றன.

- பாடலை கை, கால் அசைவு தாளம் மற்றும் இசையுடன் பயிற்சி செய்யுங்கள்.

CG – 2
C – 2.1
